Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாலிபெட்டி என். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 297
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 20 ரமழான் 3 புதன்கிழமை (6-12-67)

## 'அடுத்தமுறைவரும்போது ஆடம்பரவரவேற்பு வேண்டியதில்லை

### பிரதமர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன் நான் அடுத்த தடவை யாழ்ப்பாணம் விஜயம் செய்யும்போது கமக்காரர்களுடைய குறைகளை அறிவதற்காகவும் உணவு உற்பத்தி இயக்கம் எவ்வாறு இங்கு செயல்படுகிறது என்பதைப்பற்றியும் பார்ப்பதற்காகவும் சாதாரண பிரஜையாக வருவேன். அப்பொழுது எனக்கு ஆடம்பரமான வரவேற்புகள் தேவையில்லையென்பதை முன்கூட்டியே கூறிவைக்க விரும்புகிறேன்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்று யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்,

பிரதமர் மேலும் கூறியதாவது:-

1947-ம் ஆண்டு தொடக்கம் 52-ம் ஆண்டுவரை நான் விவசாயமந்திரியாக இருந்தபோது, யாழ்ப்பாண கமக்காரர்களின் உழைப்பையும் திறமையையும் அறிந்துகொண்டேன். அதன் காரணமாகத்தான் யாழ்ப்மாணத்தில் உள்ள கமக்காரர்கள் மீது எனக்கு ஒரு தனிப்

(5-ம் பக்கம் பார்க்க)

# "தமிழர் - சிங்களவர் ஐக்கியம் நிலைநாட்டப்பட்டுவிட்டது"

## யாழ்ப்பாண நகரில் பிரதமர் புளகாங்கிதம்

## கொட்டும் மழையிலும் தம்மை வரவேற்ற மக்களுக்கு நன்றி

— நமது நிருபர்கள் யோகநாதன் — திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், செவ்வாய்

**இலங்கை முழுவதுடனும் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் உணவு உற்பத்தித் திட்டத்துக்கு யாழ்ப்பாணவிவசாயிகள்பூரண ஒத்துழைப்பு அளித்திருக்கிறாகள் என்றும் அவர்களுக்குத்தாம் நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா இன்று நண்பகல் யாழ்ப்பாண நகரில் அமைக்கப்படவிருக்கும் நவீன மத்திய சந்தைக்கான அடிக்கல்நாட்டு வைபவத்தின்பின் பேசுகையில்தெரிவித்தார்.**

அரிசிப்பிரச்னை, தேசிய ஐக்கியம் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

நவீனசந்தை கட்டிமுடிக்கப்பெற்றதும் பாவனையாளரும் வியாபாரிகளும் பெரிதும் நன்மையடைவார்கள் என்றும் பிரதமர் சொன்ஞர். யாழ்ப்பாணமக்களின் தண்ணீர்ப்பிரச்னைபற்றி கவனம் செலுத்துவதாகவும் அவர் சொன்ஞர். இன, மத, அரசியல் பூசல்களைக் கிளப்ப எதிர்க்கட்சியினர் செய்துவரும் முயற்சி பலிக்கவில்லையென்றும், சிங்கள, தமிழர் ஒற்றுமை ஏற்பட்டுள்ளதென்றும் பிரதமர் தெரிவித்தார். கொட்டும் மழையிலும் தம்மை வரவேற்ற மக்களுக்கு அவர் நன்றிகூறிஞர். அரிசி, மற்றும் நெருக்கடிகள் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் நீங்கிவிடுமென்றும் பிரதமர் சொன்ஞர்.

பெரியகடைச் சந்தியிலிருந்து பிரதமரும் அமைச்சர் திரு. திருச்செல்வமும் உதவி அமைச்சர் ஆர். பிரேமதாசா, திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. ஆகியோர் மேளவாத்தியங்களுடன் காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீது வழியாக சந்தைக் கட்டடக் காணிவரை அழைத்துவரப்பட்டனர். வழிகளில் தமிழ் காங்கிரஸ், தமிழரசு, யூ. என். பி. கொடிகள் தொங்க விடப்பட்டிருந்தன. வா

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். விவசாயிகளுக்கு பிரதமர் நன்றி

(நிருபர் வி. பரராஜசிங்கம்)

இணுவில், செவ்வாய் தேசீய அரசாங்கத்தின் உணவு உற்பத்தி இயக்கத்துக்கு யாழ். மாவட்ட மக்கள் அளித்துவரும் உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாக பிரதர் திரு. டட்லி சேனநாயகா, இணுவிலில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

'விவசாய அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் இப்பகுதிக்கு விஜயம்செய்திருந்த எனக்கு தற்போது நீங்கள் உணவு உற்பத்துறையில் சிறந்த முயற்சி கொண்டிருப்பது குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. உணவு உற்பத்தித் துறையில் ஊக்கம் செலுத்திவரும் விவசாயிகளுக்கு தேசீய அரசாங்கம் சகலவித தேவைகளையும் பூர்த்திசெய்து வைக்கும் என உறுதியளிக்கின்றேன். மக்கள் மன்றங்களான கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக் கழகங்கள் போன்ற ஸ்தாபனங்கள் மூலம் விவசாயிகளின் குறைபாடுகளை நிவிர்த்திசெய்வதில் எமது அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. இவ்வகையான மக்கள் ஸ்தாபனங்களை திடப்படுத்தி உறுதியுடன் இயங்கவைப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும். பலபிரச்னைகளும் தீருவதற்கு இந்த நெருக்கடியான கட்டத்தில் மக்கள் உணவு உற்பத்தி இயக்கத்திதில் தீவிரமாகப் பங்குபற்றி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். யாழ். மாவட்ட மக்கள் உணவு உற்பத்தித்துறையில் காட்டிவரும் ஊக்கத்திற்கு எமது அரசாங்கத்தின் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

## சந்தையின் முதல்கட்டம் முடிந்தபின்னர் தேர்தல்?

யாழ்ப்பாணம், புதன் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின் ஸ்தலஸ்தபன மந்திரி திரு. எம். திருச்செல்வமும், தமிழ்க் காம்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் கலந்துகொண்ட முதல் பொது நிகழ்ச்சி நேற்று விமானநிலையத்தில் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு தான்.

தமிழ்க்காங்கிரஸ் எம். பிக்களின் தொகுதிகளான உடுப்பிட்டி, வவனியா தொகுதிகளில் ஏற்கனவே மந்திரி திருச்செல்வத்திற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வரவேற்பில் அத்தொகுதி எம். பி.க்கள் கலந்துகொண்டர்.

யாழ்ப்பாண மாநகரசபை வட்டார பிரிவினை சம்பந்தமாக மந்திரி திருச்செவத்திற்கும், திரு. பொன்னம்பலத்திற்கும் சுமுகமான முடிவு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. 22 வட்டாரங்களுக்கு தேர்தல் நடைபெறவேண்டுமென்ற கருத்தை இருவரும் ஏற்றுள்ளதாக தெரியவருகிறது.

நவீன பொதுச்சந்தையின் முதல் பகுதி கட்டிமுடிக்கப்பட்ட பின்னரே மாநகரசபை தேர்தலை நடத்தவேண்டுமென சிலர் கருதுவதாக தெரிய வருகிறது. இதே கருத்தைத் தான் விசேஷ கமிஷனரிகளும் கொண்டிருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

## யாழ்ப்பாணத்தில் பலத்தமழை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணி முதல் பெருமழை பெய்ததால் பல குடிசைகள்வெள்ளத்தில் மூழ்கியது. தேவரி குளம், வண்ணான்குளம் அருகில் வாழ்ந்தமக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

பெரிய கடையிலுள்ள கடைகள் பலவற்றில் வெள்ளம் புகிந்தது. முனீஸ்வரன் வீதி, பண்ணை வீதி மற்றும் ஒழுங்கைகளுக் கருகுல் வாழும் பல குடும்பங்கள் வெளியேறின.

நேற்று 8மணித்தியாலங்களாக தொடர்ந்து பெய்த மழையினுல், பெருவெள்ளம் போடும் என மக்கள் அச்சமடைந்துள்ளனர். பல பகுதிகளில் பஸ்சேவைகள் துண்டிக்கப்பட்டன.

சில இடங்களில், வீதியை வெட்டி, வளவிற்குள் நின்ற வெள்ளத்தை பொதுமக்கள் பாய்ச்சியதால், போக்குவரத்துத் தடைப்பட்டன, நேற்று பிற்பகல் 3 மணி போல லேசாகக் காற்றும் வீசியதைத் தொடர்ந்து பல வீடுகளில் மரங்கள் முறிந்து விழுந்தன.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும், தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

---

## பிரதமரை துரையப்பா சந்தித்தார்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் தேர்தல்சம்பந்தமாக நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவை அரசமாளிகையில் தானும் திரு. ஏ. ஜி. இராஜசூரியரும் சந்தித்துப் பேசியதாகவும் கொழும்பில் வந்து தம்மை சந்திக்கும்படி பிரதமர் தெரிவித்ததாகவும் முன்ஞள் யாழ். நகரமேயர் திரு. அ. த துரையப்பா நமது நிருபரிடம் தெரிவித்தார். தாம் அடுத்த வாரம் கொழும்புக்கு செல்வதாகவும் அவர் கூறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

வீடு:

இரு படுக்கையறைகளுடன் வடிகால் வசதி, குழாய் நீர்வசதி, மின்சார வசதிகளுட்பட வீடு ஒன்று 1968 தை மாதத்திலிருந்து வாடகைக்குக் கொடுக்கப்படும். ஆஸ்பத்திரி, தபாற்கந்தோர், இராமநாதன் கல்லூரி ஆகியவற்றிற்குச் சமீபமாக மருதனுமடம் சந்திக் கருகாமையில் உண்டு. விபரங்களுக்கு ஸ்ரீமதி வ. பொன்னுத்துரை, கூடல், ஆனைக்கோட்டை. 2162

### விற்பனைக்கு

காணி:

திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கொக்குவில் ஸ்ரேசனுக்கு போகும் வீதியில் கல்லுடைக்கும் மெசினுக்கு முன்பாக கிணற்றுடன் கூடிய காணி பரப்பு 4 1/2 உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். கை. மங்களேஸ்வரன், கனகராயன்குளம், மாங்குளம். 2163

**REGAL** JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
TonyKendall&Anne Smyrner
in
Three Yellow Cats
(English)
[Death, is Nimble-Death is Quick]

**மனோகரா**
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Ronald Fraser,
Barbara Windsor
in
Crooks in Cloister

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெயசங்கர், விஜயலட்சுமி
நடித்த
**இரு வல்லவர்கள்**

**இப்பொழுது திரையிடப்படுகிறது!**
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
2-30, 6-30, & 9-30 p. m.
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]
மொடேர்ன் [பண்டாரவளை]
திரை உலகிலே என்றும் கண்டிராத புதுமைக்கதை! உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்! இனிமைக் கருத்து. கடைசிவரை பார்ப்போரின் மனதில் ஐயத்தை தோற்றுவிக்கும் கதையமைப்பு! சந்திரபாபு புதுமையான பாத்திரமேற்று நடித்து டைரக்ட் செய்த உன்னத சித்திரம்.!



சந்திரபாபு—கே. ஆர். விஜயா
சாவித்திரி - மனோகர் - விஜயஸ்ரீ
ராஜன்- "சோ" நம்பிராஜன்
ஸ்டன்ட் சோமு-எம். ஆர். ஆர். வாசு
ஆகியோர் நடித்த விஸ்வபாரதியின்
**தட்டுங்கள் திறக்கப்படும்**
திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்

## தாய்மையின் தியாகம் பற்றி வாரியாரின் விளக்கம்

நாவலப்பிட்டி, செவ்வாய்
"சுடர் மேல் நோக்காகவும், நீர் கீழ நோக்காகவும் அமைவது போல் ஞானிகள் மேல் நோக்கிப் போகிறார்கள், அஞ்ஞானிகள் கீழ் நோக்கிப் போகிறார்கள். முருகவேல் மேல் நோக்கி இள்ளது. அது அறிவுக்கு வழி. முருகன் அழகன். அவனை நம்பினால் செல்வம், ஞானம், மோட்சம் கிட்டும்.

வெளி அழகை நாம் நோக்கக்கூடாது. சிவன், பார்வதி, இராமன், திருமால், வள்ளி, மன்மதன் சகலரும் கருமையானவர். நாவல் பழம் கறுப்பு. ஆனால் இனிமையானது. குயிலும் கறுப்பு. அதன் குரலினிது"

இவ்வாறு நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கஜலட்சுமி மண்டபத்தில் "முருகன் பெருமை" எனும் பொருள் பற்றி சங்கீத உபந்நியாசம் செய்த அருள்மொழி அரசு, திருமுருக கிருபானந்தவாரியார் கூறினார்.

"தாய்மை தியாகம் பூண்டது. பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைக்குத் தந்தை பெயர் விளங்கப் பெயரிடும்போது தாய்மை எதிர்ப்பதில்லை" என்றார் அவர்.

## "இராமநாதன் தோன்றியிராவிடில் சுதந்திரம் கிடைத்திராது"

பம்பலப்பிட்டி, செவ்வாய்
பேசுகையில், காலம் சென்ற "சேர் பொன்னம்பலம் சேர். பொன். இராமநாதன் இராமநாதன் எமது சமூகத்திற்கு அளப்பரிய தொண்டு புரிந்தவர். எமது சமூகத்திற்குச் செய்த கல்வித் தொண்டு மிகப் பெரியது. அரசியல் மேதாவியாக விளங்கியதோடு, தத்துவ ஞானியாகவும் அவர் திகழ்ந்தார்" என அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சேர் பொன். இராமநாதன் விழாவில் பங்கு பற்றிப் பேசிய பாரிஸ்டர் எம். சிவானந்தன் கூறினார். வழக்கறிஞர் திரு. ஏ. சி. நடராசா தலைமை வகுத்துப் தோன்றி யிருக்காவிட்டால் இலங்கை இன்னமும் சுதந்திரம் அடைந்திருக்காது என்றார்;

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்தலைவர் திரு.எஸ். தொண்டமான் பேசுகையில், சேர் இராமநாதன் காட்டிய உதாரணத்தை "நாமும் பின்பற்ற வேண்டும்" என்றார். வேறும் பலரும் பேசினர்.

## "சமாதான மூலமே நாடு வளரும்"

சாவகச்சேரி, செவ்.
எந்தப்பகுதியிலும் மக்கள் சமாதானமாக வாழவேண்டும். அப்போதுதான நாடு முன்னேற வழியேற்படும். உள்ளூர்களில் ஏதாவது கலவரம் நடந்தால் அதை உடனுக்குடன் பொலிசுக்கு அறிவிக்கவேண்டும்." என கைதடி-நாவற்குழி தெற்கு கிராம முன்னேற்றச் சங்க விசேஷகூட்டம் மகாவிஷ்ணு வித்தியாசாலைமண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. வி. எஸ் கந்தையா தலைமையில் நடைபெற்றபோது விசேஷமாகக் கலந்துகொண்டு பேசியசாவகச்சேரிபொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர், சி. ஜயதிலகா கூறினார்.

மீன்பிடிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஸ்ரானிஸ்லொஸ் பேசுகையில், இப்பகுதியில் நடைபெறும் சிறுகுவளைத் திருட்டை ஒழிக்க இப்பகுதியில் பொலிசார் காவல் புரியவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அப்பகுதியைச் சேர்ந்த 9 பேரும் வெளியிடத்தைச் சேர்ந்த 6 பேரும்கொண்ட இணக்கசபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

## தமிழிலும் கிடைக்கின்றன

பம்பலப்பிட்டி, செவ்.
இலங்கை மத்திய வங்கியில், பயணப் பத்திரங்கள்? ஏற்றுமதி, இறக்குமதி பத்திரங்கள் முதலியன இப்பொழுது தமிழிலும் கிடைக்கின்றன.

இப்பத்திரங்கள் இதற்கு முன்பு தமிழில் கிடைக்காதபடியால் தமிழ் பிரமுகர்களும், மத்தியவங்கியிலுள்ள தமிழ் ஊழியர்களும், தமிழ் எம். பி.க்களும் இதுபற்றி நீண்டகாலமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடுசெய்து வந்தனர்.

இப்பத்திரங்களைத் தமிழ் பேசும் மக்கள் பயன்படுத்துவதன் மூலம் மத்தியவங்கியிலுள்ள தமிழ் பேசும் ஊழியர்கள் தமிழில் பணியாற்ற வழிவகுக்கலாமென தமிழ் ... கின்றனர்.

## 'சமத்துவம் அளிப்பீர்களென நம்புகின்றேம்"

### பிரதமரை வரவேற்று உடுவில் கி. ச. தலைவர் உரை

குரும்பசிட்டி, செவ்வாய்
"இலங்கை மாதாவின் ஆட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் கைக்குமாறிய 9வருட காலத்திலும் சிதைவுற்றுக் கிடந்த தேசிய சமூகப்பிளவுகளை தாங்கள் ஆட்சி அமைத்தபோது மீண்டும் ஒற்றுமைக்குக் கொண்டுவந்த தங்கள் பெருமையை எம்மால் பாராட்டாமலிருக்க முடியாது. ஜனநாயகத்தின்பாதுகாவலராகிய தாங்களும் யூ.என்.பி. கட்சியினரும் தமிழ்பேசும் இனத்தை அடிமைகளாகமதிக்காது இலங்கை சுதந்திரம் பெற நடாத்திய போராட்டங்களில்சிங்களமக்களோடு தமிழ் மக்களும் தோளாடு தோள் நின்று போராடிய உரிமை எமது இனத்திற்கும் சமமாகவுண்டு என்ற உண்மையைத் தங்கள் மனத்தில் இருத்தி எமது இனம் இழந்த உரிமைகளை மீண்டும் பெறத் தாங்கள் தலைமை தாங்கியுள்ள ஆட்சி வழிவகுக்கும் என உறுதிபூண்டு தங்களை வரவேற்பதி பெருமகிழ்சி அடைகின்றேன்."

பிரதமர்திரு. டட்லி சேனநாயகா உத்தியோக ரீதியில் உடுவில் தொகுதிக்கு விஜயம் செய்திருந்த போது உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச.முத்துலிங்கம் பிரதமரை வரவேற்றுப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமது வரவேற்புரையில் திரு.முத்துலிங்கம் மேலும் கூறியதாவது:—

"தமிழ் மக்கள் கொண்டுள்ள சமத்துவ அரசுரிமை வேட்கையை தங்கள் ஆட்சிக் காலத்தில் தீர்த்து வைப்பீர்கள் என்ற நம்பிக்கையும் உறுதியும் எமக்குண்டு. தமிழ்—சிங்கள இனத்தவர் வேற்றுமைப் பட்டு வாழும் அவல நிலைமை மீண்டும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும்"

## இன்று கும்பாபிஷேகம்

குரும்பசிட்டி, செவ்
குரும்பசிட்டி முத்துமாரி அம்பாளுக்கும் இவ் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகர், சுப்பிரமணியர், சனீஸ்வரன், வைரவர், சண்டேஸ்வரி முதலான பரிவார மூர்த்திகளுக்கும் நாளைக் காலை 7 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றது. நண்பகல் மகேஸ்வர பூசையும் இரவு உற்சவத்தின்போது கூட்டுப் பிரார்த்தனை, கதாப்பிரசங்கம் ஆகியனஇடம்பெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாட்கள் காலை விசேஷ அபிஷேகமும் பூசையும் உற்சவமும், இதையடுத்து 30 நாட்கள் மாலை அபிஷேகமும் பூசையும் நடைபெறும். மகாசங்காபிஷேகம் அடுத்த மாதம் 19-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

## எம். பி. நடவடிக்கை மேற்கொள்வார்

குரும்பசிட்டி, செவ்வாய்
தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த அம்பனை, பன்னாலைக் கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களையும், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர்ச்சேதங்களையும் காங்கேசன்துறை எம், பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்சனிக்கிழமை நேரிற்சென்று பார்வையிட இருக்கின்றார், தமிழரசுக் கட்சியின் தெல்லிப்பழைக் கிளையினர் விடுத்திருந்த கோரிககையைத் தொடர்ந்து காங்கேசன்துறை எம். பி. இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுத்து வேண்டிய நிவாரண உதவிகள் வழங்க மேற்கொள்வர். இப்பகுதி வெள்ளம் காரணமாகச் சிரமிந்துள்ள பஸ்சேவைசம்பந்தமாக நடவடிககைஎடுக்கும்படியும் எம். பி. கேட்கப்பட்டுள்ளார்,

## சுங்கப்பகுதி உப்புக் கிடங்கில் சேலைகள்

மாவிட்டபுரம், செவ்வாய்
யாழ்ப்பாணம் சுங்கப்பகுதியினருக்குக் கிடைத்த ஓர் இரகசியத் தகவலைத்தொடர்ந்து சுங்கப்பகுதியினர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள உப்பு சேமித்து வைக்கும் கிடங்கொன்றைச் சோதனையிட்ட பொழுது. இந்தியாவிலிருந்து கடத்திக்கொண்டுவந்ததாகக் கருதப்படும் சுமார் 5000 ரூபா பெறுமதியான சேலைகளையும், சாரங்களையும் கண்டுபிடித்தனர். 2சூட்கேசுகளிலும், ஒரு காட்போட் பெட்டியிலும் அடைத்துவைக்கப்பட்ட இவை கடத்தப்படுவதற்குத் தயாராயிருந்ததாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக விசாரணை நடாத்திய வட பகுதி பதில் சுங்கக் கலெக்டர் திரு. கே. கந்தசாமி பொருட்களைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டதுடன் சம்பந்தப்பட்ட உப்புக்கிடங்கின்காவலாளிக்கும் நூறுரூபா அபராதம் விதித்தார்,

## விபத்து வழக்கில் எதிரிவிடுதலை

ஊர்காவற்றுறை, செவ்.
காரைநகர் சிவாலய பிரதம குருக்களான ஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களை காரைநகர் வலந்தலைச் சந்தியில், களனி வாசியான ஹெட்டி ஆராச்சிகே சிறிசேன என்பவர் அதி வேகமாகவும்கவலையீனமாகவும் காரை ஓட்டி மோதிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் வாதி தரப்பு சாட்சியான எஸ். இராசையா என்பவர் விபத்து நடந்த வேளையில் அக்காரை எதிரி செலுத்தவில்லையென்றும் தானே செலுத்தி வந்ததாகவும் கூறவே நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## இருவரை இடமாற்ற கோரிக்கை

சுழிபுரம், செவ்.
யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் யாழ். மேற்குப் பாதைகளுக்கு நேரப்பதிவாளர்களாகக் கடமையாற்றும் இருவரையும் உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டுமென சுழிபுரம் கிராமசபைப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தலைவர் திரு. சு. கந்தசாமி தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளார்.

நீதியுடன் மக்கள் நிலைமையறிந்து கடமையாற்றும் ஊழியர்களையே நியமிக்க வேண்டும் என அம்மகஜரில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைப்பிரஸ்: "சகல அந்நிய துருப்புக்களும் வெளியேறவேண்டும்" ஜனாதிபதி மக்காரியோஸ் கோரிக்கை

நிக்கோஷியா, டிச.5

**சைப்பிரஸிலிருந்து எல்லா அந்நிய துருப்புக்களும் வெளியேற்றப்பட வேண்டுமென்று சைப்பிரஸ் ஜனாதிபதி வண. மக்காரியோஸ்கேட்டுக்கொண்டுள்ளார். சைப்பிரஸிலுள்ள ஐ.நா. சமாதானப்படையைத் தவிர்த்து ஏனைய துருப்புக்கள் அனைத்தும் வெளியேற வேண்டுமென அவர் கோரியுள்ளார்.**

இக்கோரிக்கையை அவர், ஐ.நா.சபைக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்நிய துருப்புக்கள் வெளியேற்றப்படும் அதே நேரத்தில், சைப்பிரசுக்கு வெளிநாட்டுக் குறுக்கீட்டிலிருந்து பாதுகாப்பு அளிக்கவும், சைப்பிரசின் தேசிய சுதந்திரத்தைக் காக்கவும் ஐ. நா. பந்தோபஸ்துசபை உத்தரவாதம் அளிக்கவேண்டுமென மக்காரியோஸ் கேட்டுள்ளார்.

**கிரேக்க கருத்து**

சைப்பிரஸிலிருந்து அந்நிய துருப்புக்கள் அனைத்தும் வெளியேற வேண்டுமென்ற மக்காரியோஸ் விடுத்துள்ள கோரிக்கைபற்றிக் குறிப்பிடுகையில், தமது நாட்டுத் துருப்புகளும், துருக்கித் துருப்புகளும் கட்டம் கட்டமாக வாபஸ் பெறப்படுமென கிரேக்கவெளியுறவு மந்திரி கூறினார். 45 நாட்களில் தமது நாட்டுத்துருப்புகள் வெளியேற்றப்பட்டுவிடுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், 1960-ம் வருடத்தைய சூரிச் உடன்படிக்கையின் கீழுள்ள துருப்புகள் தொடர்ந்து சைப்பிரஸில் இருக்கும் என்று கிரேக்க வெளியுறவு மந்திரி கூறினார். இந்த உடன்படிக்கையின்கீழ், கிரீஸ் 950 துருப்புக்களையும், துருக்கி 650 துருப்புக்களையும் சைப்பிரஸில் நிறுத்தலாம் எனவிதிக்கப்பட்டுள்ளது.

**படைக்கலைப்பு**

சைப்பிரஸிலுள்ள தேசிய

(6-ம் பக்கம் பார்க்க)



## அரபு உச்சி மாநாடு பற்றி முரண்பட்ட கருத்துகள்

கெயிரோ, டிசெ. 5

அரபு உச்சி மாநாட்டுக்கான ஆயத்தங்களை அரபு லீக் செய்து வருகின்றது.

அரபு நாடுகளின் வெளியுறவு மந்திரிகள், அரபு உச்சி மாநாட்டின் திகதியை நிர்ணயிக்கும், மற்றும் ஒழுங்குகளைச் செய்யவும், அடுத்த சனிக்கிழமை கூடுகின்றனர்.

அரபு உச்சி மாநாட்டை இம்மாதம் 12-ம் திகதி கூட்ட வேண்டுமென்று ஜோர்தான் மன்னர் ஹுசெயின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சூடான் ஜனாதிபதி, அரபு உச்சி மாநாடு சிறிது காலத்துக்குப் பின் போடப்பட்டால் நல்லது என அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். ஐ. நா. வில் மேற்கு ஆசியா பற்றி எடுக்கப்படும் முயற்சிகளின் விளைவுகளை அறிந்து கொண்டு மாநாட்டை அழைப்பது உசிதமென்பது அவரது கருத்தாகும்.

டமாஸ்கஸ், அரபு உச்சி மாநாட்டு ஆலோசனையை அறவே நிராகரித்துள்ளதுடன், அரபு நாடுகளின் போராட்டம் மேலும் வலுவடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுள்ளது.

## 'அணு ஆயுத பரவல் தடைக்கு புதிய முயற்சிகள் வேண்டும்'

### ஐ. நா. வில் தீர்மானம்

நியூயோர்க், டிசெ. 5

அணு ஆயுத பரவல் தடை சம்பந்தமாகப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரும், பத்து நாடுகளின் தீர்மானமொன்று, ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டியில், நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்குச் சாதகமாக 56 நாடுகள் வாக்களித்தன. எதிராக ஒரு நாடும் வாக்களிக்கவில்லை. 33 நாடுகள், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஐ. நா. வுக்கு

## தெ. ஈமன் குடியரசு விண்ணப்பம்

ஏடன், டிச. 5

புதிதாகச் சுதந்திரமடைந்துள்ள தெற்கு ஈமன் [தென் அரபியா] குடியரசு, ஐ. நா. அங்கத்துவத்துக்கு விண்ணப்பம் செய்துள்ளது.

இவ்விண்ணப்பத்தை ஐ. நா. சபையில் தான் பிரேரிப்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

## போட்டி கம்யூனிஸ்ட் இயக்கங்கள்

### லாஸாவில் மோதல்

ஹொங்கொங், டிசெ. 5

சீனாவிலிருந்து கிடைக்கும் செய்திகள், திபெத்தின் தலைநகரான லாஸாவில், இரண்டு போட்டி கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கிடையே நடைபெற்ற மோதலில் பலர் கொல்லப்பட்டதாகக் கூறுகின்றன.

## 5-ந்திகதி உபதேர்தல்

கொட்டாஞ்சேனை, செவ்.

நாத்தாண்டியாத்தொகுதி உபதேர்தல் ஜனவரி 5-ம் திகதி நடைபெறவிருக்கிறது. ஐக்கிய தேசீயக்கட்சியின் சார்பில் திரு. ஹியூ. பெர்னன்டோவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அபேட்சகராக திரு. பி. திஸ்ஸேராவும் சுயேச்சையாக திரு. வீரசூரியாவும் போட்டியிடுகின்றனர்.

## திறப்புவிழா

வட்டுக்கோட்டை, செவ்.

வட்டுக்கோட்டை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக் கிளைஸ்தாபன திறப்புவிழா நாளை நடைபெறவிருக்கிறது.

# ஆங்கில நீடிப்பு மசோதாவை எதிர்த்து மாணவர் ஆர்ப்பாட்டம்

## லக்னோ, வாரணாசியில் நீடிக்கிறது

லக்னோ, டிசெ. 5

ஆங்கில நீடிப்பு மசோதாவுக்கெதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து பொலிசார் விதித்திருந்த தடையுத்தரவுகள், லக்னோவிலும், வாரணாசியிலும் நீக்கப்பட்டுள்ளன.

உத்தரப் பிரதேச ஆளுங் கட்சியின் கமிட்டிக் கூட்டத்தில், தடையுத்தரவுகள் நீக்கப்பட வேண்டுமெனவும், ஆர்ப்பாட்டங்களில் கைது செய்யப்பட்டோர் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**மசோதாவுக்கு எதிர்ப்பு**

அத்துடன், பிரச்னைக்குரிய ஆங்கில நீடிப்பு மசோதாவை வாபஸ் பெறுமாறு மத்திய அரசைக் கோரும் தீர்மானமொன்றும் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டது.

மசோதாவை வாபஸ் பெறவேண்டுமெனக் கோரும் தீர்மானத்தில், ஆளுங் கட்சியில் உறுப்பினராகவுள்ள கம்யூனிஸ்ட் கட்சி பங்கெடுத்துக் கொள்ளவில்லை.

**ஆர்ப்பாட்டங்கள் தொடருகின்றன**

இதற்கிடையில், ஆங்கிலத்தை நீடிப்பதற்கு வகை செய்யும் மசோதாவை எதிர்த்துப் பல நகரங்களிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

லக்னோவில், மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களின்போது, பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். 92 பேர் கைது செய்யப்பட்டனர்.

அலஹாபாத்தில், இன்று முதல், மூன்று நாட்களுக்கு எல்லாப் பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டுள்ளன.

ஆக்ராவில், மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர்.

பட்னாவிலும், மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மகாராஷ்டிராவில்

## 24 பள்ளிக்கூடப் பிள்ளைகள் படகு விபத்தில் பலி

பம்பாய், டிசெ. 5

மகாராஷ்டிராவில் ஜங்கா என்னுமிடத்துக்கு அருகே ஏற்பட்ட படகு விபத்தில் 24 பள்ளிக்கூடப் பிள்ளைகள் உயிரிழந்தனர்.

28 பிள்ளைகளும், ஓர் ஆசிரியரும் குளமொன்றின் மீது உல்லாசப்படகுப் பிரயாணமொன்றில் சென்று கொண்டிருக்கையில், அவர்கள் சென்று கொண்டிருந்த படகு சடுதியாகக் கவிழ்ந்து விட்டது.

ஐந்து பேர்கள் காப்பாற்றப்பட்டார்கள் 24 சடலங்கள் அண்மையிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## இந்தியா வந்துள்ள சோவியத் தூதுகோஷ்டி

புதுடில்லி, டிச. 5

சோவியத் ரஷ்யாவிலிருந்து 9பேரடங்கிய பார்லிமென்ட் தூது கோஷ்டியொன்று இன்று புதுடில்லி வந்து சேர்ந்தது.

இரண்டு நாள் நல்லெண்ண விஜயத்தில் வந்துள்ள இத்தூது கோஷ்டி இந்தியப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு வியாழக்கிழமை [illegible]க்குச் செல்லவிருக்கிறது.

வியட்னும் பிரச்னை

# ஐந்து நாடுகள் மாநாட்டுக்கு முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் யோசனை

லண்டன். டிசெ. 5

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமரான சே. அந்தோனி ஈடன், வியட்னும் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, ஐந்து நாடுகளடங்கி ஒரு மாநாட்டிற்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அவர் குறிப்பிட்டுள்ள ஐந்து நாடுகளும் பிரிட்டன், ரஷ்யா, இந்தியா, போலந்து, கனடா ஆவனவாகும்.

இவற்றில், பிரிட்டனும் ரஷ்யாவும், ஜெனீவா மாநாட்டின் இணைத்தலைவர்களாகும் இந்தியா, போலந்து, கனடா இம்மூன்று நாடுகளும் சர்வதேசக் கட்டுப்பாடு கமிஷனைச் சேர்ந்த அங்கத்தவர்களாகும்.

## இந்திய ரொக்கெட்

திருவனந்தபுரம், டிசெ. 5

தும்பா ரொக்கெட் நிலையத்திலிருந்து. இந்தியாவிலேயே முற்றிலும் தயாரிக்கப்பட்ட இரண்டாவது ரொக்கெட் [illegible] நேற்று [illegible] ஏவப்பட்டது.

## 'லக்சலா' பற்றி மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் உள்ள 'லக்சலா' ஸ்தாபனத்தினர் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர்க் கைத்தறித்துணிகளைப் பெற்றுக்கொள்ள மறுக்கின்றனர் என்று அறியப்படுகிறது.

பலமுறை இம்முயற்சியில் தோல்வி கண்ட உள்ளூர் நெசவு உற்பத்தியாளர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள லக்சலா, உள்ளூர்ப்பொருட்களைப் புறக்கணிக்கிறதென்றும், அங்குள்ள ஆலோசகர்களே அதற்கு இடையூறாக இருப்பதனால் அவர்களிடம் தமக்கு நம்பிக்கை இல்லையென்றும் உள்நாட்டமைச்சருக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளதாகவும் தெரிகிறது. [நி]

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவுப்பதில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் ஆர். பரமதாசன் அடுத்த மாதம் முதல் குருநாகல் ஜெனரல் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு கண்டி ஆஸ்பத்திரியைச்சேர்ந்த டாக்டர் கே. இராசலிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சென்ற நான்கு ஆண்டுகளாக முதலாவது அப்போதிக்கரியாகக் கடமை செய்யும் திரு. பொ. நாகலிங்கம் அடுத்தமாதம்முதல் குருநாகல் மாவட்டத்தைச்சேர்ந்த மீகல கிராம ஆஸ்பத்திரிக்கு பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறரைப்பற்றி நாம்குறைவாகப் பேசுகிறேம். ஆனல் அவர்களின் நன்மைகளை எடுத்துக் கூறுவதில்லை. ஒவ்வொரு மனிதனிடமும் நன்மையும் தீமையுமுண்டு. ஆகையால் பிறரிடம் நல்ல குணங்களைகாண நாம் முயலவேண்டும்.

—சுவாமி சிவானந்தா


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க வருடம் கார்த்திகைமீ 20உ (6-12-67)


## ஒற்றுமை நீடிக்கட்டும்

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்றுயாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொழுது கொட்டும்மழையையும்பொருட்படுத்தாது யாழ்ப்பாண மக்கள் திரண்டுநின்றுஅவருக்கு அளித்த உற்சாகமான வரவேற்பு, தேசிய ஐக்கியத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல தமிழ்பேசும் மக்கள் அனைவருக்குமே உள்ள நம்பிக்கையையும் ஆர்வத்தையும் எடுத்துக்காட்டுவதாக இருந்தது. அரசியல் ஆதிக்க நோக்கங்களுக்காக யாழ்ப்பாண மக்களைப்பற்றி தென்னிலங்கையில் வாழும் பெரும்பான்மைச் சமூகத்தவர் மத்தியில் சிலர் செய்து வரும் தவருன பிரசாரத்தை நீக்குவதற்கு நேற்றைய நிகழ்ச்சிகள் உதவுமென நம்புவோம்.

யாழ்ப்பாணத்தின் நீண்டகாலத்தேவையான நவீன மத்திய சந்தை அமைக்கப்பட விருப்பதுடன் இதுவிரைவில்கட்டிமுடிக்கப்படுவதற்கு அரசாங்கம் இருபத்தைந்துலட்சம்ரூபாகடனுதவிஅளிக்கவும் சம்மதித்திருக்கிறது.

நாட்டின் சகல பகுதிகளுக்கும் பிரதம மந்திரியும் இதர அமைச்சர்களும் அடிக்கடி சென்றுஅப்பகுதி மக்களின் குறை நிறைகளை நேரில் கண்டறிந்து அவற்றை நீக்குவதற்கு முயற்சிசெய்வதன் மூலம் அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்குமிடையில் நெருங்கிய ஒத்துழைப்பும் ஒற்றுமையும் ஏற்படவழி செய்யலாம்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததனுல் தேசிய ஐக்கியம் மேலும் வலுப்பெறவும் அரசாங்கத்தின் நிலையை மக்கள் அறிந்து கொள்ளவும் மக்களின் கஷ்ட நஷ்டங்களை அரசாங்கம் உணர்ந்துகொள்ளவும் நல்லவாய்ப்பு ஏற்பட்டது. இதுதவிர யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்லாது இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடையக் கூடிய நிகழ்ச்சிகளும் நேற்று நடைபெற்றிருக்கின்றன.

தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துவேறுபாடுகளை மறந்து பலவிஷயங்களிலும் கலந்துபேசி, தங்களுக்குள் வேறுபாடு இல்லையென்பதை பொதுமக்கள் முன்னிலையில்பகிரங்கமாகக் காண்பித்துக் கொண்டனர். உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வமும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் பரஸ்பரம் ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டதும் குறிப்பிடக்கூடிய சம்பவம்.

தமிழ்மக்களுக்குப்பிரதிநிதித்துவமளிக்கும் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் ஒற்றுமை நீடித்து தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடிய விஷயங்களில் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பினுல் தமிழ்மக்களின் கஷ்டங்கள் பல நீங்கிவிடும். நேற்று யாழ்ப்பாண மக்கள் கண்ட, தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களின் ஒற்றுமை இனியும் நீடிக்க வேண்டும்.

## அபார சாதனை

வைத்தியத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தையே ஏற்படுத்தியிருக்கிருர்கள் தென்னுபிரிக்க வைத்திய நிபுணர்கள்.

இப்படியும் நடக்க முடியுமா என்று எவருமே மூக்கின் மேல் விரல்வைக்கக் கூடிய மகத்தான சாதனையை அவர்கள் நிறைவேற்றியிருக்கிருர்கள்.

இருதய நோயுடைய 56 வயதான ஒரு மனிதரின் இருதயத்தைஅகற்றி அதற்குப்பதிலாக, விபத்தில் சிக்கி உயிர் நீத்த ஓர் இளம் பெண்ணின் இருதயத்தைப் பொருத்தி அந்த மனிதரை உயிர் வாழ வைத்திருக்கிருர்கள் மனிதகுல சரித்திரத்திலேயே இதுவரைஎங்கும், எவரும் நிகழ்த்தியிராத சாதனைஇது. இந்தச்சாதனைபற்றி உலக நாடுகள் பலவற்றிலுமுள்ள வைத்திய நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது நீண்ட காலம் வெற்றியளிக்க மாட்டாதென்றும் நிலையான வெற்றிதரமாட்டாதென்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இச்சாதனையைச்செய்து முடித்த வைத்திய நிபுணரே தன்வேலை முடிந்ததும் இனி 'ஆண்டவன் வேலை' என்று சொல்லி இறைவன்மீதே பாரத்தைப்போட்டார். எனவே இந்த அரியசாதனை கடவுளை மிஞ்சிவிட்டதென்று எவரும் நினைக்க இடமில்லை.

# (எண்) சோதிடர் பார்வை

## நவீனசந்தையும் பிரதமர் விஜயமு...

சோதிடர்கள் எதிர் கால பலனைக்கருதி .புத்தி அனுபவ மூலமாகக் கூறுவார்கள். அவர்கள் அப்பலன்களைக் கூற ஆதாரமாக விருப்பது நாளும் கோளும் எண்களுமாகும். இவ்வடிப்படையில் 5.12. 1967-ல் யாழ்ப்பாண நவீன சந் சந்தைக்கு எங்கள்கௌரவ பிரதமமந்திரி அவர்கள் அடிக்கல் நாட்டினுல் எதிர் காலத்தில் எங்கள் தாயகச் சந்தை எவ்வகையில் முன்னேற்றமடையுமென ஆராய்வதே சிறப்புடையதாகும்.

இலங்கை [Ceylon] 24-ம் இலக்கத்தில் அமைந்து சுகபோக நாடாகக் காட்சியளிக்கின்றது. யாழ்ப்பாணமும் [Jaffna] 24-ம் இலக்கத்தில்அமைந்து இலங்கையின் சிகரமாக விளங்குகின்றது. இலங்கையின் தலைப்பட்டினமாகிய கொழும்பு [Colombo]33-ம் இலக்கத்தில் அமைந்துமிகப் பெரிய மாட மாளிகைகளையும், வானளாவிய கட்டடங்களையும், பாராளுமன்றத்தையும் உள்ளடக்கி அழகாபுரியெனக் காட்சியளிக்கின்றது. இலங்கை $24=2+4=6$, யாழ்ப்பாணம் $24=2+4=6$ கொழும்பு $33=3+3=6$ ஆகவேகொழும்பைப்போல் யாழ்ப்பாணமும் காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை.

6-ம் இலக்கம் சுக்கிரனுடையதாகும். சுக்கிரன் மக்களுக்கு போகபோக்கியத்தையும், இல்லற இன்பத்தையும் ஆடம்பரவாழ்க்கையையும் கொடுக்கின்ற கிரகமாகும். ஒருசாதகத்தில் சுக்கிரன் பெலமடையாதவர்கள் இன்பமாக வாழ முடியாது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற சுப கருமங்களெல்லாம் 6,15,24-ம் திகதிகளில் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதாகும். நமது நவீன சந்தையும் 24.11.1967-ல் சமயாசாரப்படி அத்திபாரமிட்டதாக அறியக் கூடியதாக இருக்கிறது. அது மிகவும் விசேடமானதாகும்.

சுக்கிரனுக்கு மிகவும் விருப்பமான கிரகம் புதனுவார். வியாபாரத் துறையில் முன்னேறுபவர்கள் புதன் ஆதிக்கரே. புதனுக்கு 5,14,23ந்திகதிகள் மிகவும் பொருத்தமான திகதிகள். அத்திகதிகளில் செய்யப்படுகின்ற வியாரக்கருமங்கள் வெகு வேகமாக முன்னேறுமென்பதிற் கையமில்லை.

1956-யூன் 5-ந் திகதிக்குப் பின் யாழ்ப்பாணத்தில் மகோன்னத வரவேற்போடு வந்திறங்கும் பிரதமர் கௌரவ திரு. டட்லி சேனநாயக்கா அவர்களே. அவர்கள் எமது தாயகத்துக்கு வரும் திகதி 5 ஆக அமைந்திருப்பதும் அவர்களுடைய பெயர் 5 ஆக அமை... ந்து குருசந்திரயோகத்... கொடுப்பதும் எமது ச... எதிர்காலத்தில் மிகு சி... டன் விடங்குமென்பதி... மில்லை.

19-ம் திகதியிற் பி... (1+9=10)U.N.P.என... இலக்கத்தை யுடை... (1+9=10) கட்சிக்... தலைமை தாங்கி NATIO... GOVERNMENT என்... இலக்கத்தை யுடை... (7+3—10)தேசிய அர... சாங்கத்தை அமைத்து, ... மக்களது ஒற்றுமைத் ... ஞக விளங்கும் உதய... யன் இலக்கத்தைக்கொ... பெருமகன் எமதுசந்... அடிக்கல் நாட்டுவதுமி... பெருமைப்பட வே... விஷயமாகும்.

காங்கேசன்துறை, உ... கோப்பாய், நல்லூர், ய... பாணம் ஆகிய 5 தொ... ளின் பந்தல்களில் வர... கப்படும் கௌரவம் பி... ருக்கு 5 பூரண பலத்... கொடுக்கின்றது. ஆ... யாழ்ப்பாண வர்த்தக ...

ஐ. சரவணபவான்

## இன்றைய பலன்

6-12-67
புதன்கிழமை
கார்த்திகை மாதம்
20-ந் திகதி

நட்சத்திரம்- திருவோணம் இரவு 9-15 மேல் அவிட்டம்.

திதி- பஞ்சமி பி. ப. 3-17 மேல் ஷஷ்டி

சுபநேரம் 4-47 - 6-17

ராகுகாலம்-12-17-1-47

மேஷம் - போதுமென்ற மனம் பொருளும் சேரும்.

ரிஷிபம்-இதயசுகம், இன்பங்கள் பெருகும்.

மிதுனம் - வழுக்கி விழலாம், ஒழுக்கம் வேணடும்.

கடகம் - காந்தப் பார்வை, கவர்ச்சியின் அழைப்பு.

சிம்மம் - வழக்கு விவகாரம், வரவும் தடைப்படும்

கன்னி - தங்கக்குணம், தரத்திலும் உயர்வு.

துலாம் - தொழிற் பெருமை. துரிதமுன்னேற்றம்,

விருச்சிகம் - அருளு பொருளும் சேர்ந்து கிடைக்கும்.

தனுசு -இருண்டமனம், பரபரப்பு மிகுதி.

மகரம்-உதவிக்கு விரைவீர், உபத்திரவமுண்டு.

கும்பம் - அறுசுவையுண்டி, ஆனந்த வாழ்வு.

மீனம் - ஆழம் அதிகம், காலைவிடாதே.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

# அரத்தாள் உற்பத்தி ஸ்தாபனம் கோரிக்கை

வெள்ளவத்தை, செவ். இலங்கை அரசாங்கம் தற்பொழுது வருடமொன்றுக்கு 1,200,000அரத்தாள் அட்டைகளைத் தனது உள்நாட்டுக் கட்டிடத் தேவைகளுக்கென்று வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்கிறது. இந்த அரத்தாள் அட்டை இறக்குமதியைத் தடைசெய்யும்படியும் இலங்கைக்குத்தேவையான அரத்தாளில் 719,200 அட்டைகளை ஒவ்வொரு வருடமும் தாங்கள் உற்பத்தி செய்து தரமுடியுமென்றும் பாணந்துறையிலுள்ள இலங்கை அரததாள் உற்பத்தி ஸ்தாபனம் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகாரியைக் கேட்டுள்ளது. தங்களுடைய ஸ்தாபனம் கொடுப்பதுடன் மிகுதியை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுள்ள அரத்தாள் உற்பத்திச்சாலைகளில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் இத்தாபனம் தெரிவித்துள்ளது

இந்த அரத்தாள் இறக்குமதியைத் தடை செய்து உள்நாட்டு உற்பத்திக்கு மதிப்பளித்தால் ஆண்டொன்றுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை மிச்சம் பிடிக்கமுடியுமென்றும் இலங்கை அரத்தாள் உற்பத்தித்தாபனம் தெரிவித்துள்ளது.

பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு

# தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்க... ஒன்றுதிரண்டு அளித்தவரவேற்...

## மழையில் நனைந்தபடி மாணவர்கள் அணிவகுப்பு

— நமது நிருபர்கள் கே. யோகநாதன்—எஸ். திருச்செல்வம்—

விமானநிலையத்தில் காலை 7 மணி முதல் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. தூறிக்கொண்டிருந்த மழையையும பொருட்படுத்தாது பாடசாலை மாணவ மாணவிகள் அணிவகுத்து விமான நிலையம் வந்தனர்.

யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் ஜஹைப் ஜாமீல், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி, யாழ்ப்பாணமாவட்ட நீதிபதி திரு. விஜயசேகரா நாகவிகாரைப் பிரதம குருவண. நந்தாராம நாயக்க தேரோ, முஸ்லிம் பிரமுகர்கள் உட்பட ஆயிரக்கணக்கானேர் திரண்டிருந்தனர்.

உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. எஸ் கதிரவேற்பிள்ளை, செனட்டர் திரு நீதிராசா யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. என். நடேசன், ஆணையாளர் ஹட்சன் செல்வராசா உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம, உதவி அரசாங்க அதிபர் திரு. மி. முருகேசம்பிள்ளை, காரியாதிகாரிகள், கிராம சேவகர்கள், கிராமசபை, பட்டின சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், வர்த்தகர்கள், வழக்கறிஞர்கள் சகலரும் திரண்டிருந்தனர்.

### ஆசிரியர்கள் சார்பில்

விமான நிலையத்தில்ஏராளமான விஞ்ஞான, தமிழ் ஆசிரியர்கள் காணப்பட்டனர். இவர்கள் சார்பிலும் பிரதமருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இவர்களில் பலர் இடமாற்றம்பெற்றுள்ள ஆசிரியர்கள் எனக் கூறப்பட்டது.

நடுத்தர வகுப்பினர் மட்டும்தான் விமான நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். சாதாரண விவசாயிகளும், தொழிலாளர்களும் மழையில் நனைந்தபடி நின்ருர்கள் பொலிசார் அவர்களை விமான நிலையத்துக்குள் வராதபடி தடுத்துக் கொண்டிருந்தனர்.

நூற்றுக்கணக்கான கார்கள், தமிழரசு, தமிழ்ககாங்கிரஸ் கொடிகளைத் தாங்கி விமான நிலையத்துக்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்தன.

சுமார் ஒன்றரைமணி நேரம் தாமதித்தே பிரதமரின் விமானம் வந்திறங்கியது. விமானம் வரும் வரை எல்லோரும் ஆவலோடு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இணுவிலில் இராமநாதன் கல்லூரி மாணவிகள் திரண்டு நின்று வரவேற்பு அளித்தனர். பிரதமருக்கு மாலை சூட்டினர்.

### கார்கள் மோதல்

இணுவிலில் உடுப்பிட்டி எம். பி சென்ற காருடன், தமிழரசுக் கொடியுடன் வந்த கார் ஒன்று சடுதியாக மோதிக் கொண்டது. கார்களுக்கு சேதம்ஏற்படவில்லை.

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னல் அலங்கார சிகரம் அமைக்கப்பட்டிருந்... இரு கட்சி கொடிகளு... தனை இணுவிலி... யாழ்ப்பாணம் வரை... யின் இரு கரையிலும், ... சாலை மாணவ, மாண... திரண்டு நின்று வர... னர்.

### மயிலிட்டியில்

மயிலிட்டிச் ச... வைத்து வட்டுக்கோ... எம். பி. திரு. அ. அ... லிங்கம் பிரதமரை வ... ருர். திரு. செல்வந... சுகயீனம் காரணமாக... வரவேற்பில்கலந்துகெ... வில்லை.

### இணுவிலில்

இணுவில் சந்தியி... வில் எம். பி திரு... தர்மலிங்கம், பிரதம... அமைச்சர் திருச்செ... துக்கும் மாலையிட்டு... வேற்ருர். உடுவில் ... பிரதமரை வரவே... பேசுகையில், உடுவில் ... மக்கள் பிரதமரின் ... கோளை ஏற்று உண... பத்தியில் நன்கு ஈ... வருகின்றனரென்ருர்.

உடுவில் கிராமச... பில் அதன் தலைவரான... முத்துலிங்கத்தினுல் வ... புப் பா ஒன்று வழங்... டது.

### வண்டி பழுது

பத்திரிகை நிரு... சென்ற ஜீப் வண்டி... கொக்குவில் சந்தியில்... ரோட்டில் பழுதடை... பொலிசார் அவ்வண்... வீதி ஓரத்திற்கு தள்... கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர்வையில்

...பழும்

...ஆக அமைந்திரு
...திரயோகத்தைக்
...ம் எமது சந்தை
...தில் மிகு சிறப்பு
...துமென்பதில்ஐய

...கதியிற் பிறந்து
...U.N.P.என 19
...தையுடைய
...கட்சிக்குத்
...ங்கி NATIONAL
...ENT என்ற 73
...தயுடைய
...தேசிய அரசாங்
...மைத்து, தேசிய
...ற்றுமைத் தலைவ
...கும் உதய சூரி
...த்தைக்கொண்ட
... எமதுசந்தைக்கு
...ாட்டுவதுமிகவும்
...பட வேண்டிய
...ம்.
...ன்துறை, உடுவில்
... நல்லூர், யாழ்ப்
...கிய 5 தொகுதிக
...ல்களில் வரவேற்
...களரவம் பிரதம
...ண பலத்தைக்
...றது. ஆகவே
... வர்த்தக உலகு

## ...மக்கள் ...வேற்பு

...ல்வம்—
...பட்டிருந்தது.
... கொடிகளும்பறந்
...னுவிலிருந்து
...ணம் வரை வீதி
...கரையிலும், பாட
...ணவ, மாணவிகள்
...நின்று வரவேற்ற,

### ...டியில்

...டிச் சந்தியில்
...வட்டுக்கோட்டை
... திரு. அ. அமிர்த
...ரதமரை வரவேற்
.... செல்வநாயகம்
...காரணமாக இந்த
...ல்கலந்துகொள்ள

### ...வில்

...ல் சந்தியில் உடு
... பி திரு. வி.
...ம், பிரதமருக்கும்
... திருச்செல்வத்
... மாலையிட்டு வர
... உடுவில் எம்.பி.
... வரவேற்றுப்
...ல், உடுவில் பகுதி
...ரதமரின் வேண்டு
...ற்று உணவு உற்
... நன்கு ஈடுபட்டு
...னரென்றுர்.
... கிராமசபைசார்
...தலைவரான திரு
...கத்தினுல்வரவேற்
...ன்று வழங்கப்பட்

### ...பழுது

...கை நிருபர்கள்
...ப் வண்டியொன்று
...ல் சந்தயில் நடு
... பழுதடைந்தது.
...ர் அவ்வண்டியை
...த்திற்கு தள்ளினுர்

புதனின் கிருபா கடாட்சத்தால் எதிர்காலத்தில் துரித முன்னேற்றமடையுமென்பதை எண்கள் எடுத்தியம்புகின்றன.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## சுவையான சம்பவங்கள்

[யாழ்ப்பணத்தில் நேற்று நிகழ்ந்தநவீனசந்தைக்கான அத்திவாரக்கல்நாட்டு விழாவின்போது நிகழ்ந்த சுவையான சில சம்பவங்கள்]

— யோகி —

### இரகசியம் என்ன?

மேடையில் பிரதமர் நடுவில் இருக்க அவருக்கு இடதுபக்கத்தில் இருந்த அமைச்சர் திருச்செல்வம் பிரதமருக்கு வலதுபக்கத்தில் இருந்த திரு. ஜி. ஜி பொன்னம்பலத்துடன் இரகசியமாகக் கதைத்தபோது பொதுமக்கள் கரகோஷம் செய்து தமதுமகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்

இதனைக் கண்ட பிரதமர் திரு, டட்லி சேனநாயகா இருவர் கழுத்தையும் தமது கரங்களால் அணைத்து ஒன்ருக்கி ணைத்தார். அப்போது பொதுமக்கள் அனைவரும் கரகோஷம்செய்து நாம் 'இணைந்தோம் இனிப் பிரிவில்லை' எனக் கோஷமிட்டார்கள்.

### தமிழிலும் பேசினர்

பிரேமதாசா, கையில் எழுதிவைத்து தமிழில் பேசியபோது தரு. பொன்னம்பலம் எட்டிப்பார்த்து தமிழை சிங்களத்தில் எழுதிப் பேசுவதாக பிரதமருக்கு கூறினுர், பிரேமதாசா தமிழிலும், சிங்களத்திலும் பேசினுர்.

### திருமலைக்கு செல்லுங்கள்

யாழ்ப்பாணத்தில் ஜனப் பெருக்கம் அதிகமாகிவருவதாகவும் இங்குள்ளவர்கள் திருகோணமலைக்கு செல்ல வேண்டுமென நாகநாதன் தமிழில் கூறியபோது, பந்தலில் சலசலப்பு ஏற்பட்டது உடனே பிரதமர் அருகில் இருந்த ஜி. ஜி. யிடம் என்னென்று கேட்ட அவர் ஆங்கிலத்தில் அதனை கூறிய போது பி,ரதமர் மெதுவாக சிரித்தார்.

ஃ ஃ ஃ

விமானநிலையத்தில் பிரதமரை வரவேற்க முன்னுள் மாநகரசபை உறுப்பினர் எவரும் சமுகமளிக்கவில்லை. முன்னுள் மேயர்கள் கூடக் கலந்துகொள்ளவில்லை

ஃ ஃ ஃ

கமிஷனர்கள் ஆட்சி ஏற்படுமுன், மாநகரசபைக்கு குழிதோண்டப்பட்டது என ஜி. ஜி. கூறியபோது, கொட்டகைக்குள் இருந்த மக்கள் கரகோஷம் செய்தனர். மந்திரி திருச்செல்வம்அதனை பிரதமருககு ஆங்கிலத்தில் விளக்கிக் கூறினுர்.

ஃ ஃ ஃ

வரவேற்புப் பந்தல் சிகப்பு, மஞ்சல் நிறங்களால் அலங்காிக்கப் பட்டிருந்தது மந்திரி திருச்செல்வம்பேசும் போது பச்சை நிறத்தால் (யூ. என். பி. யின் நிறம்) அலங்கரிக்காதது பற்றிகுறிப்

### கொக்குவிலில்

கொக்குவில் சந்தியில் செனட்டர் நீதிராஜா பிரதமருக்கும், அமைச்சருக்கும் மலர் மாலை சூட்டி வரவேற்ருர்.

## ஆளும்கட்சிக் கூட்டத்தில் தமிழரசு, காங்கிரஸ் ஐக்கியம்

யாழ்ப்பாணம், புதன் நேற்று முன்தினம் நடந்த அரசாங்க பாராளுமன்ற குழுக்கூட்டத்தில், தமிழ்க் காங்கிரஸ் தொழில் நுட்ப கல்வி மசோதாவிற் சில திருத்தங்களைக் கொண்டுவந்தது.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இதுபற்றிப் பேசிக்கொண்டிருந்த போது, யாழ்ப்பாண எம். பி. திரு. பொன்னம்பலம் அவதானித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் மந்திரி திருச்செல்வம், யாழ்ப்பாண எம். பியின் அருகில் சென்று அமர்ந்து, அவருடன் பேசிக்கொண்டிருந்தது, அங்கிருந்த சிங்கள எம். பிக்களுக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்ததாம்.

தமிழ்க்கட்சிகளை நம்ப முடியாதென்றும், கடைசி நேரத்தில் ஒன்றுசேர்ந்து விடுவார்களென்றும், சிங்கள எம். பிக்கள் சிலர் பேசிக்கொண்டனராம். கூட்டம் முடிந்ததும் சிங்கள எம். பிக்கள், இதைப்பற்றியேபேசிக்கொண்டிருந்தனராம்.

## திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

### 9-ம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ். திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் திருவெம்பாவைத் திருநாட்களான இம்மாதம் 9-ம் திகதி முதல் 18-ம் திகதிவரை ஈழத்து சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் சாதனையும் திருவாசக விழாவும் நடைபெற விருக்கின்றது. இவ் விழாவை மன்னர் உதவி அரசாங்க அதிபர் திரு. நா. வேதாரணிய சேயோன் 9-ம் திகதி காலை ஆரம்பித்து வைப்பார்.

தினமும் காலையில் திருவெம்பாவை பாரயணம், ஆலய வழிபாடு தியானம், புராண படனம், திருவாசக பாராயணம் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. புராண படனத்தில் திருவாளர்கள் சி. கணபதிப்பிள்ளை, த. குமாரசுவாமிப்பிள்ளை, சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்வர்.

இம் மாதம் 9-ம் திகதி முதல் 11-ம் திகதிவரை இரவில் திருவாசக ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நடைபெறும். பண்டிதர் வே சங்கரப்பிள்ளை, சைவப் புலவர் சு. செல்லத்துரை, சித்தாந்த செம்மல் சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் இதில் உரையாற்றுவர். 12 முதல் 14-ம் திகதிவரையான திருவாசகச் சிறப்புரையில் அருள் திரு. வடிவேலு சுவாமிகள், புலவர் அ. திருநாவுக்கரசு, சைவப் புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வா.

திரு. மு. வைரமுத்து தலைமையில் 15-ம் திகதி நடைபெறும் திருவாசக விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி திரு. க. கந்தசாமி, சைவப்புலவர் சு. செல்லத்துரை ஆகியோர் விரிவுரையாற்றுவர்.

16-ம் திகதி காலை மாவட்ட காணி அதிகாரி திரு. செ சிவஞானம் தலைமையில் பண்டிதர் மு. ஆறுமுகம், திரு. எம். பி. எம். முகம்மது காசீம் ஆலீம், ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதி திரு. வே. க. கந்தசாமி ஆகியோர் உரை நிகழ்த்துவர். இரவு பொறியியலாளர் திரு. இ. வைத்திலிங்கம் தலைமையில் திரு. எம். தியாகராசா, திரு. வ. செல்லையா சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

இறுதி நாளான 17-ம் திகதி காலை திருவாளர்கள் த. குமாரசாமிப்பிள்ளை, பொன். அ கனகசபை, சி. ஆறுமுகம் ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவர். திரு இரா. சபாநாயகம் தலைமை வகிப்பார். இரவு சைவப் புலவர் க. கணபதிப்பிள்ளை தலைமை தாங்கும் விழாவில் திரு. கி. பி. ஹரன், பண்டித தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. பொன் தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர் தினமும் தினமும் திருவாசகம் ஓதலும் நடைபெறும்.

—

பிட்டபோது. பிரதமர் லேசாகச் சிரித்தார்.

ஃ ஃ ஃ

பிரதமர் பேசும்போது, ஜி. ஜி. யையும் திருச்செல்வத்தையும் சுட்டிக்காட்டி இருவரும் ஒற்றுமைப்பட்டு விட்டால் எனக்குத்தான் கரைச்சலாக இருக்குமென்றும நேற்று நடந்த அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்திலும் கல்வி விஷயத்திலும் இருகட்சியும் ஒற்றுமையாக வாதிடுவோர் கள் என்றும் [illegible]

## அடுத்த..............

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாசம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நவீன மார்க்கெட் அவசியமாகிறது. உற்பத்தியாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் தற்பொழுதுள்ளகஷ்டத்தை இந்தச் சந்தை நீக்கிவைக்கும்.

65-ம் ஆண்டு தாம் அரசாங்கத்தை பாரமேற்ற போது, ஒருசில தினங்களுக்கு போதியளவானஇறக்குமதிப் பொருட்களே இருந்தன. நாங்கள் படிப்படியாக நிலைமையைச் சீர்திருத்தி வருகிறேம். கடந்த வருடம்முதல் நாங்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. உலக சந்தையில், இலங்கையின் ஏற்றுமதி பொருள்களுக்கு கிராக்கி குறைந்தது.

நாணயமதிப்பு குறைப்பையிட்டு சிலர் தவருகப் பேசி வருகின்றனர். பிரிட்டன் மூலமே எங்கள் ஏற்றுமதிப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதால் இந்நிலை ஏற்பட்டது, பிரிட்டன் நாணயமதிப்புக் குறைப்புச் செய்தபோது, இலங்கைக்கும் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனுல் அரிசிக்கு கொடுக்கும் கூடிய தொகையான பணத்தை மக்கள் மீது சுமத்தாமல் அரசாங்கம் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒரு குறிப்பிட்ட தரத்திலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு 15 ரூபா சம்பள உயர்வும், உள்ளூராட்சி ஊழியர்கள் கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கு சம்பளம் கூட்டியதாலும் ஏற்பட்ட மேலதிக பணத்தை தாம் பொதுமக்கள்மீது சுமத்தவில்லை.

ஏற்கனவே அரிசிக்காக 5 கோடி 70 லட்சம் கொடுக்கவேண்டியுள்ளது. நாணய மதிப்புக் குறைப்பால், மேலும் [illegible] வேண்டி

உள்ளது. எல்லாமாக 9 கோடி 70 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஏற்க வேண்டியுள்ளது. அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு மூலம் 6 கோடி ரூபா கொடுக்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் பொது மக்கள் மீது சுமத்தவில்லை. இலங்கையில் ஏற்றுமதி பொருட்களான தேயிலை, றப்பருக்கு நாணயமதிப்பு குறைப்பு மூலம் விலை கூடியுள்ளது. இதனுல் வெளிநாட்டு மூலதானத்தை பெருக்க வழியுண்டு.

தற்பொழுதுள்ள சூழ்நிலையில், நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க கூடிய வகையில் நாம், அத்தியவசியமான, உணவு, உடை, ஆகியவற்றை அதிகரிக்க முயல வேண்டும். இதன் காரணமாகவே நாங்கள் இன்று உணவு உற்பத்தியில அக்கறை காட்டுகிறேம். தேசிய அரசாங்கம் கடந்த இரண்டரை வருடகாலத்தில் என்றுமில்லாத வகையில் கூடிய அளவு உணவு உற்பத்திக்கு செலவு செய்துள்ளது

மாநகரசபை கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா நன்றியுரை கூறினுர்.

## பந்தலில் நடந்த 'அரசியல்கல்யாணம்'

அழகான மணவறை. கல்யாணப் பந்தல். முகூர்த்த நேரம். காலை 9-30. மத்திய மார்க்கெட்டுக்கு அடிக்கல் நாட்டப் பிரதமர் வருவதை அறிந்துதான் போலும் வருணன் இங்கு முகாம் போட்டு இரவுபகலாகக் கொட்டுகொட்டென்று கொட்டிவிட்டான் கல்யாணத்தின்போது மழை பெய்தால் எப்படியிருக்கும்!

''தயவுசெய்து காலை 9 மணிக்கே ஆசனத்தில் வந்து அமரவேண்டும்'' என்று அமைச்சரின் அழைப்புக்கடிதம் கேட்டிருந்தது. அப்படியே சென்றேன். இடையிலே சற்று விட்டிருந்த மழை பிரதமர் வந்ததும் முழு மூச்சுடன் பெய்தது. உடையெல்லாம் நனைந்து ஒரே தெப்பம்.

''மழையில் நீங்கள் எல்லாம் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்பதைப் பார்க்கிறேன். என்ருலும் மழை பெய்வது நல்லதோர் சகுனமாகுமென்றே நம்புகிறேன்'' என்று பிரதமர் ஆறுதலாகச் சொன்னுர். அவர் வந்தது 11-15க்குத்தான். 12-45க்கு வைபவம் முடிந்தது. வைபவத்தின் போதெல்லாம் கடும் மழை. யாழ்ப்பாணம் மழைத் தட்டுப்பாடின்றி இனி சுபிட்சமாக இருக்குமென்று வருணன் உறுதி அளிப்பதுபோல் இருந்தது.

மார்க்கெட் கட்டும் அந்த இடத்தில் அடிக்கல் நாட்டிவிட்டு, கூட்ட வைபவத்தை நகர மண்டபத்திலேயே வைத்திருக்கலாம் அல்லவா என்று நகரசபை அதிகாரி ஒருவரைக் கேட்டேன். அவரும் ஒப்புக்கொண்டார். இந்த அனுபவம் இனிப் பலருக்கும் பயன்படவேண்டும் என்றே இதைக் குறிப்பிடுகிறேன்.

ஃ ஃ ஃ

கல்யாணம் என்று சொன்னேனல்லவா? ஆமாம். அது தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. அவர்களுக்கும் உள்ளூர் ஆட்சி அமைச்சர் திருச்செல்வம் அவர்களுக்கும் அரசியல் கல்யாணம் நடப்பதுபோலிருந்தது. இருவருக்கும் மத்தியிலே பிரதமர் அமர்ந்திருந்தார். அமைச்சர் எழுந்து, ஜி. ஜி. யிடம் ஏதோ சொன்னுர். இருவரும் இப்படிப் பேசுவதைக் காண மக்கள் மகிழ்ச்சியால் கரகோஷம் செய்தனர். பிரதமர் என்ன என்று கேட்டு விஷயம் அறிந்ததும் தன் இரு கைகளையும் இரு தலைவர்கள் தோள்களிலும் போட்டு இருவரையும் சிரித்துக்கொண்டே சேர்த்து வைத்ததைக் கண்டதும் சபையிலே ஒரே ஆரவாரம்.

''இவ்விரு கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் சண்டையிட்டாலும், கொழும்பிலே என்னை எதிர்ப்பதில் ஒன்று சேர்ந்துவிடுகிருர்கள்'' என்று பிரதமர் 'புகார்' கூறியபோது, மேடைமீது இருந்த தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் சிரித்துக்கொண்டே தலையசைத்தார்கள். கூட்டத்தில் பலத்த கைதட்டல். தமிழர்களுக்குள் கட்சி வேற்றுமை என்ன இருப்பினும், தமிழரின் அடிப்படை உரிமைகளைப் பற்றிய விஷயத்தில் தலைவர்கள் கட்சிவேற்றுமையை மறந்து ஒற்றுமையாகப் போரசடுவது போறறத்தக்கது.

என்ருலும் இரு கட்சித் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து யாழ்ப்பாணத்திலும் ஒத்துழைப்பதாயின் இந்த அரசியல் கல்யாணத்தை தமிழர்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் வரவேற்பார்கள்! அந்த நாளும் வந்திடாதோ!

ஃ ஃ ஃ

இந்த வைபவத்தில் பலர் மனதையும் கவர்ந்தது. உதவி அமைச்சர் பிரேமதாசாவின் தமிழ்ப் பேச்சு.

### ஜயதரன் எழுதுவது

முதலில் சிங்களத்தில் பேசி பின்னர் உடனுக்குடன் தமிழிலும் ஒவ்வொரு வாக்கியததையும் அவரே மொழி பெயர்த்தபோது, மக்களுக்கு அதிக மகிழ்ச்சி. அதை அடிக்கடி கரகோஷத்தால் தெரிவித்தனர். முதலில் அவர் தமிழில் சற்றே கொச்சையாகப் பேசினுர். இதை அவரே உணர்ந்து இங்குள்ள சிலர் பேசியதை விட என் தமிழ் மேலாகவே இருக்கிறதென்று அவர் கூறியபோது, சபையில் ஒரே சிரிப்பும் கரகோஷமும்.

இதுவரை சிங்களத் தலைவர் யாரும் இங்கு வந்து தமிழில் பேசியுள்ளதாக எனக்குத்தெரிந்து இல்லை. உதவி அமைச்சர் பிரேமதாஸா காட்டிய இம் மேலான முன்மாதிரி தமிழ் பேசும் மக்களுக்குப் பெரும் ஆறுதலும் நம்பிக்கையும் அளிப்பதாவதுடன், இரு சமூக ஒற்றுமைக்கும் அடிகோலும். இவ்விருமொழிகளும் மீண்டும் அரசாங்க மொழிகளாக முடியாவிட்டாலும் நாடெங்கும் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் இவ்விருமொழிகளையும் கற்பிக்க ஒழுங்குசெய்தால், மொழிப்பிரச்னைக்கு இடமிருக்குமா?

ஃ ஃ ஃ

தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவாலும் ஒத்துழைப்பாலு தான் தேசிய அரசாங்கம் அமைக்க முடிந்துள்ளதாயும்கூறி இதற்காக உதவி அமைச்சர் பகிரங்கமாக நன்றி தெரிவித்தார்.

சென்ற இரண்டரை வருடங்களாக, இனவேற்றுமையைக்கிளப்பிவிட்டு தேசிய அரசாங்கத்தை முறியடிக்க சிலர் செய்யும் முயற்சிகள் பலிக்கவில்லை என்றும் ஆவேச அவர்கள் வேறு

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள, தமிழ் பிள்ளைகளுக்கு தாய்மொழியே போதனு மொழி

## ஏனைய சமூகத்தினருக்கு பெற்ருேர்-விருப்பம்

## 4-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம்கட்டாயபாடம்

### மந்திரிசபை முடிவுகள்

கொழும்பு, செவ்.

**சிங்கள, தமிழ்ப் பிள்ளைகளின் போதனுமொழி, அவர்களின் தாய்மொழியாக இருக்கும் மற்றைய சமூகத்தவரின் பிள்ளைகளின் போதனுமொழி, அவர்களின்பெற்ருேர்விருப்பம்போல் சிங்களமோ அன்றித் தமிழாகவோ இருக்கும்.**

கல்வி மந்திரியின் பொது, தொழில்நுட்பக்கல்வி மசோதாவின் நகலை நேற்றுஆராய்ந்த மந்திரிசபை, இம்முடிவுகளை எடுத்துள்ளது.

பெற்ருேரின் விருப்பப்படி பிள்ளைகளின் போதனுமொழிஅமையவேண்டுமென கல்வி மந்திரியின் மசோதா முதலில் தெரிவித்திருந்தது. ஆனுல் இதைத் தமிழரசுக் கட்சியினர் கடுமையாக ஆட்சேபித்ததைத் தொடர்ந்து சிங்கள, தமிழ் பிள்ளைகளின்போதனுமொழி அவர்களின் தாய்மொழியாக்வே இருக்குமென மந்திரிகள் முடிவுசெய்தனர்.

சிங்கள, தமிழ் சமூகங்களைத் தவிர்த்த ஏனைய சமூகங்களான பறங்கியர், முஸ்லிம்களைப் பொறுத்தவரை. அவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சிங்களம் அல்லது தமிழைப் போதனுமொழியாகத் தேர்ந்தெடுக்க உரிமை அளிப்பதெனவும் மந்திரிகள் நேற்றுமுடிவு செய்தனர்.

**முஸலிம் எதிர்ப்பு**

இம் முடிவுக்குக் காரணம் சிங்கள தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களமும், தமிழும முறையே போதனுமொழியாக அமையவேண்டுமென்ற நிபந்தனையை முஸ்லிம் எம். பி.க்கள், கடுமையாக எதிர்த்ததேயாகும். இந்நிபந்தனையின்படி, முஸ்லிம் மக்கள் தமது பிள்ளைகளுக்குத் தமிழ் படிப்பிக்க நிர்ப்பந்திக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் ஆட்சேபித்திருந்தனர்.

**ஆங்கிலம் கட்டாய பாடம்**

மந்திரிகள் நேற்றைய கூட்டத்தில் மேற்கொண்ட மற்றைய முடிவொன்று அடுத்த வருடம் தொடக்கம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் 4-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்குவதென்பதாகும்.

தற்போதைய பள்ளிக்கூடங்களிலிருந்து வெளிவரும் மாணவர்களின் ஆங்கிலத் தராதரம் மோசமாகவுள்ளதாகவும், இதற்குக் காரணம், கீழ் வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படாததே என்றும் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

சில மந்திரிகள், மூன்ரும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கட்டாய பாடமாககப்பட வேண்டுமென வாதித்தனர்.

கல்வி மந்திரியின் நகல் மசோதாவின்படி ஆங்கிலம் ஐந்தாம் வகுப்பிலிருந்தே கட்டாய பாடமாக்கப்படுவதென விதிக்கப்பட்டிருந்தது.

## சைப்பிரஸ்.........

[3-ம்பக்கத் தொடர்ச்சி]

பாதுகாவலர் படையைக் கலைப்பது பற்றிக் கிரேக்க வெளியுறவு மந்திரி குறிப்பிடுகையில், ஐ.நா. சமாதானப்படைக்கு விரிவான அதிகாரங்கள் அளிக்கப்படும் பட்சத்தில், தேசியப்படை கலைக்கப்படலாம் எனக் கருத்துத் தெரிவித்தார்.

**பந்தோபஸ்துசபை உத்தரவாதம்**

தேசியப் படைக்கலைப்பு பற்றி சைப்பிரஸ் வெளியுறவு மந்திரி கருத்துத் தெரிவிக்கையில், வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து சைப்பிரசுக்கு ஐ. நா. பந்தோபஸ்து சபை உத்தரவாதம் அளித்தாலன்றி, அப்படை கலைக்கப்படமாட்டாதெனக் கூறியுள்ளார்.

# நேர்முகப் பரீட்சைக்கு செ[l]லவிருந்த இளைஞன்

## முல்லைத்தீவுக் கடலுக்குப் பலி

முல்லைத்தீவு, செவ்

மீன்பிடிக் கூட்டுஸ்தாபனத்தில் வேலையொன்றுக்கான நேர்முகப்பரீட்சைக்குச்செல்லவிருந்து 22 வயது நிரம்பிய வாலிபன் இன்று கடலுக்குப் பலியாகிவிட்ட பரிதாப சம்பவம் முல்லைத்தீவில் நிகழ்ந்துள்ளது. முல்லைத்தீவு கோவிற் குடியிருப்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை சூசதாசன்பிள்ளை இன்று அதிகாலையில் இன்னுமிருவருடன்கட்டுமரமொன்றில் முல்லைத்தீவுக் கடலில் சென்றனர். அப்போது கடலில் ஏற்பட்ட பயங்கரக் காற்றினுலும், அலைகளின் வேகத்தினுலும் இவர்கள் சென்ற கட்டுமரம் கவிழ்ந்தது. சூசைதாசன்பிள்ளையைத் தவிர மற்ற இருவரும் ஒருவாறு கரைசேர்ந்துவிட்டனர். மாலைஆகியும் சூசைதாசன்பிள்ளையின் சடலம் வெளிவரவில்லை. காலை முதல் சோகமே உருவாக முல்லைத்தீவுக் கடற்கரை காட்சியளித்தது. ஆயிரக்கணக்கானேர் கடற்கரையில் நின்று கடலையே நோக்கியவண்ணம்இருக்கின்றனர்

# 15-ந் திகதி பிரதமர் நாவலப்பிட்டி செல்கிருர்

நாவலப்பிட்டி, செவ்.

இம்மாதம் 15-ந் திகதி நாவலப்பிட்டிக்கு உத்தியோக ரீதியில் விஜயம்செய்யவிருக்கும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு சிறந்த முறையில் வரவேற்பளிப்பதற்கு நகர சபை, வியாபாரிகள் சங்கம், யு. என். பி. வாலிபர் சங்கம் ஆகியவைஒழுங்குகள்செய்து வருகின்றன.

அரசினர் ஆஸ்பத்திரியில் அமைத்திருக்கும் புதிய சத்திர சிகிச்சைக்கூடம், இம் புல்பிட்டியா தோட்டத்தில் அமைத்துள்ள நவீன மின்சார இயக்கம்கொண்ட தேயிலைத் தொழிற்சாலை ஆகியவற்றை பிரதமர் திறந்துவைப்பார்.

சுமார் 5 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் மாடிக்கட்டிடம் கொண்ட தபால் நிலையத்திற்கு அத்திபாரக்கல்லையும் பிரதமர் நாட்டுவார்.

# யாழ்ப்பாணம் ஆசிரியர்கள் மூதூர் வருகின்றன[ர்]

மூதூர், செவ்வாய்

1968-ம் வருடம் தை முதல் அமுல் செய்யப்படும் இடமாற்றத் திட்டத்தையொட்டி யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பல ஆசிரிய ஆசிரியைகள் மூதூர் பகுதிககும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இவ்விதம் இடமாற்றம் பெற்றவர்களின் நாமாவளிகள் தற்சமயம் சம்பந்தப்பட்ட பாடசாலைத்தலைவர்களுக்கு வந்துள்ளது. மூதூர் மகா வித்தியாலயம், அந்தோனியார் பாடசாலை மல்லிகைத்தீவு பாடசாலை, சேனையூர் பாடசாலை ஆகியவைகளுக்கு இவர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

இப்புதியவர்கள் வருகையினுல் இப்பகுதிப் பாடசாலைகளில் உண்டான ஆசிரியர்கள் தட்டுப்பாடு நீங்கும் எனக்கருதப்படுகிறது.

# 'அத்துளுதிட்ட மூலம் நீர்பெற வசதி செய்க'

## மத்தொனி வட்டார மககள் மகஜர்

உடுப்பிட்டி, செவ்வாய்

''கரவெட்டி மேற்கு மத்தொனி வட்டாரத்திலுள்ள சிறுபான்மை தமிழ் மக்கள் குடிதண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்படுகிருர்கள். இவர்களுக்குரிய ஒரே ஒரு கிணறும், அரை மைல் தூரத்திலுள்ள வயல் வெளியில் உள்ளது. இந்தக் கிணறு கோடைகாலத்தில் வற்றி விடும். மாரிகாலத்தில்மட்டும் இதில்நீர்பெறலாம். ஆனுல் மாரியில்இக்கிணறு வெள்ளத்தால் சூழ்ந்திருக்கும்.

இந்நிலையில் இவர்கள் குடிநீர் பெறமிக நீண்டதூரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. அண்மையில் நிறுவப்படவிருக்கும் ''அத்துளு தண்ணீர் திட்டத்'தின்மூலம் இப்பகுதி சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் அத்துளு தண்ணீர்த்திட்டத்தின் மூலம் குழாய் மூலம் குடிநீர்பெற வகைசெய்ய வேண்டும்'' எனக் கேட்டுக்கொள்ளும் மகஜரொன்றை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகருக்கு, கரவெட்டி மேற்கு மத்தொனி கிருவள்ளுவர் சனசமூகநிலையத்தினர் அனுப்பிவைத்துள்ளனர்.

## பட்டின வீதிகளை பொறுப்பெடுத்தது

மூதூர், செவ்வாய்

மூதூர் பட்டினசபையின் நிர்வாகத்தில் இதுவரை காலமும் இருந்து வந்த கோவில் வீதி, இக்பால் வீதி, புதிய துன்றமுடி வீதி ஆகியவற்றை பகிரங்க வேலைப் பகுதி பாரமெடுத்துக் கொண்டதாய் தெரிய வருகிறது.

மூதூர் பட்டினசபையானது பல செலவீனங்களை தாக்கிப் பிடிக்கவேண்டியதன் காரணமாக இருப்பதால் பட்டினத்தில் உள்ள முக்கிய வீதிகளையாவது பாரமெடுக்கும்படி பட்டின சபை பகிரங்க வேலைப் பகுதியை கேட்டு வந்தது. அண்மையில் மூதூருக்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சரிடம் இதைக் கவனித்து உதவுமாறு பட்டினசபையார் வேண்டினர். இதைத் தொடர்ந்து பட்டினசபைத் தலைவரும் சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பேட்டி கண்டார். இவைகளின் பலனுக பிரஸ்தாப மூன்று பிரதான வீதிகளையும் பாரமெடுக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு...

ஏற்படுவதாய் பட்டின சபைக்குக் கடிதம் வந்துள்ளது.

# மணவீட்டுக்குவந்தவர் பிணமாகமிதந்தார்

சாவகச்சேரி, திங்கள்

திருமண வைபவத்திற்கு வந்த வாலிபர் குழத்தில் மூழ்கி மாண்ட சம்பவம் ஒன்று தச்சன்தோப்பில் நிகழ்ந்துள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த பொன்னம்பலம் சுப்பிரமணியம் என்ற 16 வயது வாலிபரே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவராவார்.

இவரது மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே திரவியநாயகம் மரணவிசாரணை நடத்தினுர்.

இவ்வாலிபர் தன் நண்பர் இருவரைக் குளிக்க வரும்படி கேட்டதாகவும், அவர்கள் அதை விரும்பாது மறுத்துவிட்டதாகவும் குளி ஓடிவிட்டு வருகிறேன் நான் என இறந்தவர் கூறிவிட்டுச் சென்றதாகவும், திருமணம் முடிந்து சாப்பிடுவதற்காக வாலிபரைத் தேடியபோது மேற்கண்ட விபரம் தெரிய வந்ததாகவும் குளத்திற்குச் சென்று பார்த்தபோது அவர் இறந்துகிடக்கக் காணப்பட்டதாகவும் விசாரணையின்போது தெரியவந்தது.

சாவகச்சேரி சட்டவைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தினுர். விபத்தினுல் ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## ஓவசியர்கள் பொதுக்கூட்டம்

திருகோணமலை, செவ்

வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவை ஓவசியர்களின் 3-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திருகோணமலை நகரமண்டபத்தில் திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது. திருகோணமலை எம். பி., திருகோணமலை நகரசபைத் தலைவர் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஓவசியர்களுக்கு பயிற்சிக்கால நீடிப்பு, சைக்கிள் அலவன்ஸ் அதிகரித்தல், ஓவசியர்களின் முன்னேற்றம், ஓவசியர்களுக்கு கிராம சபை சட்டத்தின்படி எழுந்துள்ள பிரச்னைகள், மாறற விஷயங்கள், தமாஷா வரிச்சலுகை முதலியன சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெர்வுசெய்யப்பட்டார்கள்: தலைவர்- எஸ். ஏ. ஞானப்பிரகாசம். காரியதரிசி- சி. இராசகுலசிங்கம், உப தலைவர்- சி. வில்பேர்ட், உப காரியதரிசி- எம். எஸ். சம்மூன், தனுதிகாரி- இ. துரைராஜசிங்கம், உப தனுதிகாரி- சி. எம். அன்ரனிதாஸ், 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான தற்காலிக கட்டட தளபாடங்கள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் ரேட், யாழ்ப்பாணம்

போன்: 7024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டப் போட்டி
## இம்மாத முடிவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அரசாங்க இலாகாக்களுக்கிடையேயான அரசாங்க ஊழியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாத முடிவில் ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியின் சாம்பியன் கிண்ணத்தைத் தட்டிக் கொள்வதற்கு ஒவ்வொரு இலாகாக்களும் திறமையான உதைபந்தாட்ட வீரர்களைத் தயார் செய்து கொண்டிருக்கின்றன.

இவ்வருடம் இச்சுற்றுப் போட்டி யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இரு பிரிவாக இப் போட்டிகள் நடத்தப்பட்டு இரு பிரிவிலும் சாம்பியன் கோஷ்டிகள் தெரிவு செய்யப்படவிருக்கின்றன. இச்சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றவிருக்கும் இலாகாக்கள் எதிர்வரும் 20-ம் திகதிக்கு முன்னர் இந்த உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ஈ. கே. குமரையாவுக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

சென்ற வருடம் இச்சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவில் தபால் பகுதியும் 'பி' பிரிவில் இலங்கைப் போக்கு வரத்துச் சபையும் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

(வி நி.)

# கிராமங்களில் விளையாட்டுத் தரம் முன்னேறும்
## அமைச்சரின் திட்டம்பற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

''இலங்கையிலுள்ள கிராமங்களின் விளையாட்டுத் தரத்தை முன்னேற்றுமுகமாக விளையாட்டு அமைச்சு புதிய அரசாங்கப் போதனாசிரியர்களை நியமித்து அவர்களின் மூலம் சனசமூக நிலையங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகளை நடத்தும் புதிய திட்டம் வரவேற்கத்தக்கதாகும். இத் திட்டத்தின் முதற்படியாக வடமாகாணத்தில்இதுவரை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றாத நூற்றுக்கணக்கான சனசமூக நிலையங்கள் காரியாதிகாரிகள் பிரிவு தோறும் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றவந்திருப்பது அமைச்சர் திட்டத்தின் முதல்வெற்றியாகும்.''

யாழ்ப்பாணம் சனசமூக நிலைய விளையாட்டுச் சங்கத்தின்ஆதரவில் யாழ்ப்பாணக் கச்சேரியின் செயலக மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் யாழ்ப்பாண அரசாங்க உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு. என். தேவபாலன் மேற்கண்டவாறு கூறினார், அவர் மேலும் கூறியதாவது:-

அமைச்சர் ஆரம்பித்திருக்கும் இப்புதியதிட்டம் முக்கியமாக கிராமங்களையே முன்னேற்றுவதாக அமைந்துள்ளது. எனினும் நகரத்திலுள்ள சனசமூக நிலையங்கள் கலந்து கொள்ளக் கூடாதென்பதல்ல. அமைச்சினால் இப்பொழுது முதல்படியாக சனசமூக நிலையங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நாடுமுழுவதும் உள்ள காரியாதிகாரி பிரிவுகளிலும் நடைபெறும். இச் சுற்றுப்போட்டியை அடுத்து கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்தில் நடைபெற விருக்கும் சனசமூகநிலையங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஏனைய விளையாட்டுச் சங்கங்கள் நடத்தும் சுற்றுப்போட்டிகளுக்கு ஏட்டிக்குப்போட்டியாக நடத்தப் படுகின்றன என்ற கருத்து தவறானதாகும்.

ஏனைய சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றத் தரம் குறைந்தவிளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுப்பதே அமைச்சரின் இப்புதிய திட்டத்தின் நோக்கமாகும்.

(வி. நி)

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்
## புதன் 6-12-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 பாங்கு.

இரவு 6-15 குரல்வகை, 6-45 இராமசஞ்சிகை. 7-15 பா வளம், 7-30 முத்தி நெறி — சைவசஞ்சிகை — செல்வி சற்சொரூவதி நாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 கதாப்பிரசங்கம்.

# உதைப்பந்தாட்ட பயிற்சி

நாவலப்பிட்டி, செவ்.

கொழும்பு உதைபந்தாட்டச் சங்கத்தின்கீழ், அகில இலங்கைப் பயிற்சியாளரான திரு. எல்பட் பெர்ணாண்டோ நாவலப்பிட்டி உதைபந்தாட்டச் சங்க அழைப்பின் பேரில் நாவலப்பிட்டி ஜயதிலகா திடலில் இரண்டுநாள் பயிற்சி அளித்தார். விளையாட்டு வீரர் பலர் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

# 4,500 ருத்தல் கடல்அட்டை

சாவகச்சேரி, செவ்.

இலங்கையிலேயே முதன் முறையாக அதிக அளவு கடல்அட்டை இரணதீவு என்ற இடத்தில் பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 4,500 ருத்தல் அட்டை பிடிக்கப்பட்டதாகவும் இவற்றின் பெறுமதி ஆறுயிரம் ரூபா எனவும் தெரிகிறது.

# அசுரன்போர்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு கற்பக விநாயகப்பெருமான் ஆலயத்தில் இன்றுமாலை [illegible]யளவில் கயமுக அசுரன் போர்த்திருவிழா நடைபெறவுள்ளது. [வி. நி]

# அதிகாரிக்கே விற்றாராம்
## ரூபா 200 அபராதம்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் வாசியான பொடி அப்புகாமி - ஆரியதாச என்பவர் கலால் உத்தியோகத்தருக்கே சாராயம் உத்தரவின்றி விற்றார் என முல்லைத்தீவுக் கலால் பரிசோதகர் திரு. எம். என். இஸ்மெயிலினால் தொடரப்பட்ட வழக்கு, முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. கலால் பரிசோதகர் திரு. எம். என். இஸ்மெயில், கலால் உத்தியோகத்தர்களான திருவாளர்கள் வி. சிவலிங்கம், ரி. நடேசு ஆகியோர் சாட்சியமளித்த பின் எதிரி சாட்சியமளிக்கையில் கலால் இலாகா உத்தியோகத்தர் வேண்டுமென்றே இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளார் என்று கூறினார். பின்பு எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி ரூபா 200 அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். கலால்இலாகா சார்பில் திரு. வி. கந்தசாமி வழக்கை நடாத்தினார். எதிரி சார்பில் புரக்டர் திரு. ஆறுகம் ஆஜரானார்.

# தூது கோஷ்டிக்கு எம். பி. வாக்குறுதி

யாழ்ப்பாணம், செவ்.

காரைநகர் தோப்புக்காடுமறைஞானசம்பந்தவித்தியாசாலைக் கட்டிடம் மிகப் பழுதடைந்துவிட்டமையால் எப்போ சரியுமென்று கூறமுடியாத ஆபத்தான நிலையிலுள்ளது. இந்தக் கட்டிடத்தை இதுவரை புனருத்தாரணம் செய்வதற்கான ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை

தற்போது பெய்துகொண்டிருக்கும் அடைமழையின் காரணமாக கட்டிடம் ஆபத்துக்குள்ளாகுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதைப்புனருத்தாரணம் செய்ய வேண்டிய அவசியத்தை மேற்படி பாடசாலை தலைமையாசிரியர் க. குமரகுருவின் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி வட்டுக்கோட்டை எம், பி. திரு. அமிர்தலிங்கத்தை நேரில் சந்தித்து வற்புறுத்தியது.

அடுத்த நிதிவருடத்துக்கிடையில் கட்டிடத்தைப் புனருத்தாரணஞ் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்வதாக அவர் வாக்குறுதியளித்துள்ளாரெனத்தெரிகிறது. [நி]

# மாணவர் களை பிடுங்கினர்

சாவகச்சேரி, செவ்.

கைதடி— நாவற்குழி தெற்கு மகாவிஷ்ணு வித்தியாசாலையைச்சேர்ந்த சுமார் 50 மாணவர்கள் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வி. எஸ்- கந்தையா, ஆசிரியர் திரு. எஸ். கந்த தலைமையில் மறவன்புலவை அடுத்துள்ள நெல் வயல்களில் களைபிடுங்கினர். இவர்கள் சுமார் 5 ஏக்கர் வயலில் களைபிடுங்கினர்.

# நிரந்தர பஸ் நிலையம் இல்லை

மூதூர், செவ்.

மூதூரில் ஒரு நிரந்தர பஸ் தரிப்பு நிலையம் இல்லாமையால் பொதுமக்கள் கஷ்டமடைகின்றனர், அத்தோடு பஸ்கள் புறப்படும் நேரஅட்டவணைகளும் பொதுமக்கள் பார்வைக்குக் கிடையாதுள்ளது. நிரந்தர பஸ் நிலையத்தின் தேவையைப்பொது [illegible] களுக்கு தெரிவித்தும் இதுவரை எவ்விதப்பலனும் கிடைக்கவில்லை.

# 7 வட்டாரங்களில் 16 பேர் போட்டி
## கிளிநொச்சி பட்டினசபை
### அபேட்சகர் விபரம்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சிப் பட்டினசபைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் மொத்தம் ஏழு வட்டாரங்களிலும் 16 பேர் போட்டியிடுகின்றனர். அபேட்சகர்கள் தங்கள் நியமனப் பத்திரங்களை நேற்று முன்தினம் தாக்கல் செய்தனர். எல்லா வட்டாரங்களிலும் தமிழரசுக்கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது,

அபேட்சகர்கள் விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்: இ. தர்மலிங்கம், வே. மார்க்கண்டு. ஏ. திருச்செல்வம்.

2-ம் வட்டாரம்: வி. ஆனந்தசங்கரி, எஸ். முருகேசு.

3-ம் வட்டாரம்: இ. கிருஷ்ணராசா, வ. த. அழகரத்தினம்.

4-ம் வட்டாரம்: இ. நடராஜா, ஏ. சிவஞானம்.

5-ம் வட்டாரம்: சி. தங்கராஜா. எஸ். பொன்னையா.

6-ம் வட்டாரம்: எம். சின்னத்துரை, கே. எஸ். கந்தையா, எஸ். துரைசிங்கம்.

7-ம் வட்டாரம்: வி. சுப்பிரமணியம், கே. நடேசலிங்கம், (நி)

# 'வெங்காய உத்தரவாத விலையை உயர்த்தவும்'
## விவசாயிகள் சம்மேளனம்
### பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்திசெய்யப்படும் முக்கியமான உப- உணவுப் பொருட்களில் ஒன்றான வெங்காயத்தின் உத்தரவாத விலையைக் கணிசமான அளவுக்கு உயர்த்துவதனால் உப-உணவு உற்பத்தியில் விவசாயிகள் ஊக்கத்துடன் செயற்பட ஏதுவாயிருக்கும் என்று கூறும் தீர்மானம் ஒன்றை கடந்த முதலாந் தேதி அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் பிரதமருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

நாணய மதிப்பு குறைக்கப்பட்ட காரணத்தினால் உள்ளூர்ப் பொருட்களுடன் ஏனைய உணவுப் பண்டங்களின் விலையும் அதிகரித்துள்ளதென்றும் ஏழை விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தே உணவுப் பொருட்களை வாங்கவேண்டியிருப்பதினால் விலையேற்றத்தினால் பயனுண்டென்றும் தாம் அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

வெங்காயப் பயிர்ச்செய்கைக் கடன்கால எல்லையை இரண்டு போகத்திற்கு ஒரு முறை கட்டக்கூடியதான வசதியைச் செய்துதரும்படியும் சம்மேளனம் கோரியுள்ளது. [நி]

பாடசாலை

# புனரமைப்பு திட்டத்தில் பண்டிதர் இடம்பெறவில்லை

உடுப்பிட்டி, செவ்.

''1968-ம் ஆண்டு முதல் தேசியக்கல்வியையும், பாடசாலைப் புனரமைப்புத் திட்டத்தையும் அமுல் நடத்துவதற்காகப் பெரிய கல்லூரிகளின் உதவி அதிபர்களும் கனிஷ்ட வித்தியாலய அதிபர்களும் வித்தியாதிபதியின் உத்தரவுப்படிமேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதினால், அரசாங்கம் இதன் மூலம் அதிபர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்துவிட்டதாகப் பெற்றோரும், ஆசிரியர்களும் அதிருப்தியும் பீதியும்அடைந்துள்ளனர். இதில் சேவையும்தராதரமும் புறக்கணிக்கப்படலாம் என ஆசிரியர் சமூகம் அச்சமடைந்துள்ளது. பாடசாலைப் புனரமைப்புத் திட்டத்தில் கல்லூரிகளில் உயர்தரவகுப்புக்களில் தமிழ் கற்பிக்கும் பண்டிதர், வித்துவான்களில் ஒருவர்கூட இடம்பெறவில்லை. இதனால் அதிபர்கள் எதேச்சையான பாதையில் சென்று கொண்டிருப்பதைப் பண்டிதர் சங்கம் நன்குணர்ந்திருக்கிறது.

அகிலஇலங்கை பண்டிதர் சங்க செயலாளர் பண்டிதர் திரு, குக வயிரவனார். மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:.

மொழி சமயத்துறைகட்கு பண்டிதர்கள் ஏன் நியமிக்கப்படக் கூடாதென்பதற்கான காரணம் விளங்கவில்லை. ஆங்கிலம் தெரியாமையே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. இது ஒரு போலிக் காரணம். ஆனால் ஆங்கிலம் தெரிந்த பட்டதாரிகளுக்கும் இது விளங்கப்படுத்தப்படவில்லை. ஆதலால் ஆங்கிலம் தெரியாமை ஒரு காரணமாக முடியாது. அப்படியெனில் கலைத்துறைப் பட்டதாரி யொருவர் விஞ்ஞானப் பாடங்களைக்கொண்ட கல்லூரிகட்கு அதிபராக இருக்கமுடியாது. அதேபோல் விஞ்ஞானப் பட்டதாரியொருவர் கலைவகுப்புக்களைக்கொண்ட கல்லூரிக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

# அபராதம்

ஊர்காவற்றுறை, செவ்.

காரைநகர் துறைமுகவாசியான அம்பலவாணர் காசிநாதர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற குற்றத்திற்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் ரூபா 200 அபராதம் விதித்தார்.

புங்குடுதீவைச் சேர்ந்த நாகநாதர் முத்துவேலு என்பவருக்கும் சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற குற்றத்திற்கு ரூபா60 அபராதம் விதிக்கப்பட்டது.

இன்னுமொரு வழக்கில் புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு தம்பியையா என்பவருக்கு இதே குற்றத்திற்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமான நிலையத்தில் பிரதமருக்கு

# கோலாகல வரவேற்பு

## இன, மத, கட்சிபேதமின்றி மக்கள் திரண்டிருந்த காட்சி

### வானம் பொழிந்தாலும் மக்கள் திரள் குலையவில்லை

(நமது நிருபர்கள் யோகி, திரு.)

யாழ்ப்பாணம், புதன் விமானம் இன்று காலை 9-15 மணிக்கு வந்து நின்றது. முதலில் பிரதமர் டட்லி சேனநாயகா இறங்கியதும், அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மாலை சூட்டினுர். அதன்பின் மந்திரி திருச்செல்வம் இறங்கினுர், மூன்ருவதாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இறங்கியபோது மக்கள் கரகோஷம் செய்தனர். அதன்பின் உதவிமந்திரி திரு. பிரேமதாசா இறங்கினுர். அதன்பின், தமிழரசக் கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இறங்கினுர். பின் பாதுகாப்புஅதிகாரிகள் இறங்கினுர்கள். தமிழ், சிங்கள முஸ்லிம்மக்கள் ஒன்ருக திரண்டுநின்று வரவேற்பளித்தனர்.

நாகவிகாரை பிரதமகுரு நந்தராமநாயக்க தேரோ, 'பிரித்' ஓதி பிரதமரை வரவேற்ருர். அதன்பின், மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள், பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், சமயாசாரப்படி வேதம் ஓதி வரவேற்றனர். இதன்பின் அங்கு வரிசையாகஇருந்தவர்களுக்கு பிரதமர் அறிமுகம்செய்துவைக்கப்பட்டார்.

பிரதமரின் வலது பக்கத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், இடதுபக்கத்தில் ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வமும் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் தொடர்ந்துவந்தனர்.

### பிரதமரின் காரில்...

காரின் அருகில் வந்ததும், மகாநகரசபை விசேஷ கமிஷனர்கள் பிரதமரை காரில் ஏற்றுவதற்காக வழிவிட்டனர். ஆனுல் விமான நிலையத்திற்கு வெளியில் மழையில் நனைந்தபடி நின்ற பொதுமக்களை, பார்த்துவிட்டு, நேராக பொதுமக்கள் இருந்த இடத்திற்கு நடந்துசென்று வணங்கியபோது பொதுமக்களும் வணங்கினுர். பிரதமர் மழையில் நனைவதைக்கண்டு பாதுகாப்பாளர் குடைகொண்டு செல்லுமுன், அவர் திரும்பிவிட்டார். இதற்கிடையில், பிரதமரின் காரில் யார் செல்வது என்ற பிரச்னை எழுந்தபோது, மாநகரசபை கமிஷனர்களான திரு. நடேசன், திரு. மாணிக்கவாசகர் இருவரும், மந்திரி திருச்செல்வத்தை அதே காரில் ஏறும்படி அழைத்துச் சென்றனர்

பிரதமரும், மந்திரி திருச்செல்வமும், உதவி அமைச்சர் பிரேமதாசாவும் காரில் சென்றனர். திரு. பொன்னம்பலம்மற்ருெருகாரிலும், டாக்டர் நாகநாதன் அரசாங்க அதிபரின் காரிலும் சென்றனர்.

### பொன்னம்பலமும் திருச்செல்வமும்

விமானத்தில் மந்திரிதிருச்செல்வத்திற்கு நேர்எதிராக திரு. பொன்னம்பலம் அமர்ந்திருந்தார். விமானத்திலிருந்து இறங்கியதும், திரு. பொன்னம்பலமும், திரு. திருச்செல்வமும் அளவளாவிக்கொண்டு சென்றனர். விமானநிலையப் படியில் ஏறும்போது திரு. பொன்னம்பலம்திரு. திருச்செல்வத்தைஇடதுகையால் அணைத்தபடிசென்ருர். ஒருகட்டத்தில் சனநெருக்கத்தில், மந்திரி திருச்செல்வம், பின் செல்லவே, திரு. பொன்னம்பலம் அவரை அழைத்து, பிரதமருக்குஅருகில்செல்லவழிவிட்டார். டாக்டர் நாகநாதனும் திரு. பொன்னம்பலமும் சம்பாஷித்தனர்.

### ஆசிரியர் ஏமாற்றம்

ஓர் ஆசிரியர் பிரதமருக்கு சூட்டுவதற்கு மாலைகள் கொண்டுவந்து ஒரு கதிரையில் வைத்திருந்தார். பிரதமர் வந்ததும் ஓர் அரசாங்க ஊழியர் அந்த மாலைகளைஎடுத்து பிரதமருக்குச் சூட்டிவிட்டார். இதனுல் ஆசிரியர் ஏமாற்றமடைந்தார்.

### பொலிஸ் அதிபரும் வந்தார்

விமான நிலையத்தில் வடபகுதி பதில் பொலிஸ் அதிபர் திரு. ஈலியன்குணவர்த்தன இரகசிய பொலிஸ் பகுதி சுப்பிரிண்டண்ட் திரு. செனிவரத்தின, உதவி இரகசிய பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. அபய குணவர்த்தன, வடபகுதி பொலிஸ் சுப்பிறிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் நிலைமையைக் கண்காணித்து வந்தனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அலரிக்அபயகுணவர்த்தன, திருமதி. திருச்செல்வம ஆகியோரும் பிரதமர் வந்தஅதே விமானத்தில் வந்தனர்.

பிரதமர் சென்ற வழிகளில் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், யு. என். பி. கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. சந்திக்குச் சந்தி அலங்காரப்பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஓர் இடத்தில் தனிச் சிவப்புக் கொடியும் பறக்க விடப்பட்டிருந்தது. வழி நெடுக மாணவ மாணவிகள் வீதியின் இருமருங்கிலும் அணி வகுத்து நின்றனர். பொதுமக்களும் திரண்டிருந்தனர்.

---

### பந்தலில்...

5-ம் பக்கத் தொடர்ச்சி

உபாயங்களைக் கையாளுவதாயும் பிரதமர்கூறி, இந்நாட்டில்சமூக நல்லுறவைப் பலப்படுத்த தம்அரசாங்கம் கூடுமானவற்றையெல்லாம் செய்யமுடியுமென்றும் உறுதிகூறினுர். பல கருத்து வேற்றுமைகள் இருந்தும், தேசீய அரசாங்கம் பலமாக உள்ளதென்பதையும், அவர்களிடையே பிளவு ஏற்படாது என்றும் இந்த வைபவத்தின்மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

---

### புனரமைப்பு...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அதிபாரக இருக்கமுடியாது. இப்பதவிகள்பொறுப்பாளர் பதவி [illegible]லாது முழுத்தகுதி நோக்கியதல்ல. சேவை, திறமை தகுதி இம்மூன்றும் புறக்கணிக்கப் பட்டுள்ளன. கல்லூரி அதிபர்கள் வித்தியாதிபதியின் சுற்றுநிருபத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளமுடியாது இப்படிச் செய்தார்களா என்பது தெரியவில்லை,

இப்பிரச்னைகளையெல்லாம் கல்வி அமைச்சருக்குத்தெளிவாக எடுத்துக்காட்டி, உடனடியாக இப்பிரச்னையில் தலையிடுமாறு தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோருக்கு இலங்கைப் பண்டிதர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும், இந்தியமனங்களை அரசாங்கம் மூலமே செய்யவேண்டுமெனத்தந்தி மூலம் பிரதமருக்குச் சங்கம் அறிவித்துள்ளதாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.

---

## தமிழர்-சிங்களவர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தகர்கள், பொதுமக்கள், ஆகியோர் இருகரையிலும் ஆயிரக் கணக்காகத் திரண்டு நின்று பிரதமருக்கு மாலையிட்டனர்.

மழை பெய்து கொண்டிருந்த போதிலும் பொதுமக்கள் பிரதமரை வரவேற்பதில் மகிழ்ச்சியுடன் ஆர்வமாக நின்றனர். சந்தைக் கட்டடக் காணி சிவப்பு, மஞ்சள் வர்ணக் கடுதாசிகளாலும், வாழை, மகர தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கட்டடக் காணியில் அமைக்கப்பட்டிருந்த பந்தலின் முகப்பில் அழகிய சிகரமொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அலங்காரப் பந்தலில் மாநகர சபையினரால் அழைக்கப்பட்டிருந்த சுமார் 2000 பொதுமக்கள் அமர்ந்திருந்தனர். பல மதப் பிரமுகர்களும் இங்கு சமூகம் கொடுத்திருந்தனர்.

முத்துச்சப்பர மேடையில் பிரதமர் புன்சிரிப்புடன் வீற்றிருந்தார். வலதுபக்கத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், இடதுபக்கத்தில் ஸ்தலஸ்தாபனமந்திரி எம். திருச்செல்வமும் அமர்ந்திருந்தனர் மேடையில் உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம், நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி. நாகநாதன், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மாநகரசபைவிசேஷ கமிஷனர்களான திரு. ..ன். நடேசன், திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், கமிஷனர் ஹட்சன் செல்வராசா, திருமதி திருச்செல்வம், திரு. பிரேமதாசா திருமதி அபயசேகரா, பாதுகாப்பு அதிகாரிகள் அமர்ந்திருந்தனர்.

பிரதமர் மேடைக்குவரும்போது மழைபெய்துகொண்டிருந்ததால்பந்தலுக்குவெளியில் ஆயிரக்கணக்காக திரண்டுநின்ற மக்கள் உள்ளே வர முயற்சித்தபோது, பொலிஸார் அவர்களைத் தடுத்தனர். சுமார் 10 நிமிடங்கள் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நெருக்கடி ஏற்பட்டது.

பிரதமர் டட்லி அடிக்கல் திரையை நீக்கியபின் ஸ்தலஸ்தாபனமந்திரி திருச்செல்வம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை பேசும்படி அழைத்தபோது பலத்த கரகோஷம் எழுந்தது. திரு. பொன்னம்பலம் தமிழில் பேசியதை மந்திரி திருச்செல்வம் பிரதமருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்தார்.

சைவசமயாசார முறைப்படி கடவுள் வணக்கத்தையடுத்து மாணவிகள் வரவேற்புக்கீதம் இசைத்தனர். மாநகரசபை ஆணையாளர் திரு. டபிள்யூ. பத்மநாதன் பிரதமரையும், அமைச்சரையும் மற்றும் பிரமுகர்களையும் வரவேற்றுப்பேசினுர்.

முதலில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

### நிர்வாகத்துக்கு ஜி. ஜி. பாராட்டு

யாழ்ப்பாணத்தில் சுமார் 20 வருஷமாக திட்டமிட்ட மார்க்கட், இடவசதியின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு மாநகரசபை கலைக்கப்பட்டபின்னர் விசேஷ ஆணையாளர்களின் முயற்சியால் இன்று கைகூடியுள்ளது. விசேஷ ஆணையாளர்கள் கடந்த 21 மாதத்தில் யாழ்ப்பாணத்துக்காகஆற்றிய சேவை மிகவும் பாராட்டத்தக்கது. இந்தத்திட்டத்துக்கு 35 லட்சம் தேவை இதற்கு 10லட்சம் மாநகரசபைக்குச் சொந்தமானது.

யாழ்ப்பாணத்துக்கு மார்க்கட் வசதியுடன் முக்கியமாக தண்ணீர் வசதி அளிக்க பிரதமரும், உள்ளூராட்சி அமைச்சரும் முயற்சி எடுக்கவேண்டும்.

மற்ற முக்கிய பிரச்னை கல்வி மசோதா. இந்தப் பிரச்னையான நெருக்கடியிலும் பிரதமர்இங்கு சமூகம் கொடுத்ததற்கு யாழ்ப்பாண மக்கள்சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் பேசியதாவது:-

'நான் தமிழில் பேசப் பயந்துகொண்டிருந்தேன். ஆனுல் எனது நண்பன் ஜி. ஜி. பொன்னம்பலம் பேசி பின்னர் எனக்கு இந்தப் பயம்போய்விட்டது.'

### ஒற்றுமைக்கு அடிக்கல்

பிரதமர் இங்கு வந்தது மார்க்கட் அத்திவாரக்கல் நாட்ட மாத்திரமல்ல. தமிழ் சிங்கள ஒற்றுமைக்கும் அத்திவாரக்கல் நாட்டவே. தமிழ்மக்களின் உரிமைக்காக திரு. டட்லி எவ்வளவோ பாடுபடுகின்ருர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜன நெருக்கடி அதிகம். இதனுல் தண்ணீர்ப் பிரச்னை ஏற்பட்டுள்ளது உண்மை. எனவேநாம்கிழக்கிலங்கையிலும், திருமலையிலும் சென்று குடியேற வேண்டும். தமிழ்மக்களின் நெல்லுற்பத்திமூலம் 800 கோடி ரூபா நயம்வரும். யாழ்ப்பாணத்தை ஒருநவீன நகரமாக்க வேண்டும். இதுதான் எனது ஆசையாகும்.

### தமிழில் பேசினுர்

உள்ளூராட்சி உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா முதலில் சிங்களத்திலும் பின்னர் தமிழிலும் பேசினுர். இவர் தமிழில் பேசுகையில், உங்கள் எம். பி. க்களிலும் பார்க்க நான் நன்கு தமிழில் பேசுவேன் என்று முதலில் சொன்னுர்.

அவர் தமிழில் பேசுகையில் சொன்னதாவது:

பிரதமருடன் நான் இங்கு வந்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

விசேஷ ஆணையாளர்கள் ஆட்சியில் இங்கு புதிய சந்தை கட்ட உள்ளூராட்சி அமைச்சர் விசேஷ கவனம் எடுத்தார் என்பதை நான் நன்கு அறிவேன். மீண்டும் மாநகரசபையை பழைய நிலைக்குக் கொண்டு வரவும் தேர்தலை நடத்தவும் உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கை மேற் கொண்டிருக்கிருர்.

இலங்கை முழுவதும் மாநகரசபை, பட்டின சபை, கிராமசபை, நகரசபைகளின் வளர்ச்சிக்காக விசேஷ நன்கொடையை உள்ளூராட்சி அமைச்சு வழங்குகின்றது. நாடு முழுவதும் சகல அபிவிருத்தியும் செய்ய உள்ளூராட்சி அமைச்சு மேற்கொண்டுள்ளது. இதுவே தேசிய அபிவிருத்தியாகும்.

முழுப் பேச்சையும் திரு. பிரேமதாசா தமிழில் பேசினுர்.

அமைச்சர் திருச்செல்வம் பேசியதாவது: நாட்டின் ஒற்றுமைக்கு தேசிய அரசாங்கம் பாடுபடுகின்றது. வடக்கு, கிழக்கு மக்கள் மற்றைய மாகாண மக்களுடன் உரிமைகளைப்பெற்று வாழ எமது அரசாங்கம் பாடுபடுகின்றது. எமக்குள் தமிழ்க்கட்சிகள் இருந்தாலும், தேசீய ஒற்றுமையில் தமிழ் எம். பி. க்களுள் வேற்றுமையில்லை. கட்சியில்வேற்றுமை இருந்தாலும் எமக்குள் அடிப்படை வேற்றுமை இல்லை. இதனுலேயே இன்று பிரதமரை ஒன்ருக தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சியினர் ஆகிய நாங்கள் வரவேற்ருேம்.

முதல் கட்டடம் 10 லட்சம் ரூபாயில் மாநகரசபைப் பணத்தில் கட்டப்படும். மிகுதி 25 லட்சம் ரூபாவை அரசாங்கம் கடனுகக் கொடுக்கிறது. இதனுல் இங்கு விரைவில் நவீன மார்க்கட் ஒன்று கட்டி முடிக்கப்படும்.

---

### விற்பனைக்கு

நாய்க்குட்டிகள்

ஒன்றரை மாத வயதுள்ள நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. சாம்பல் நிறம். பூச்சித் தடுப்பு மருந்து முதலியன கொடுக்கப்பட்டு ஆரோக்கிய நிலையிலுள்ளன. திருமதி தங்கராணி அரியரத்தினம், சுதுமலை வடக்கு, மானிப்பாய். 2164

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசெம்பர்மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org